விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 242 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 02 திங்கட்கிழமை (18.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



3ஆம் பக்கம் பார்க்க

## ஓமந்தையில் கோர விபத்து
## இருவர் பலி ; 13 பேர் படுகாயம்





15ஆம் பக்கம் பார்க்க

துப்பாக்கிச் சூடு, வாள்வெட்டு நடத்தும்

## பாதாள உலகக்குழுவை மகிந்த தரப்பே உருவாக்கியது

### அமைச்சர் பிமல் பகிரங்கம்




(கிளிநொச்சி)

தென்னிலங்கையில் அரங்கேறி வரும் துப்பாக்கிச் சூடுகள் மற்றும் வாள்வெட்டுச் சம்பவங்களுக்கு மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கடந்த கால அரசாங்கங்களே காரணம் 16ஆம் பக்கம் பார்க்க

- செம்மணி முதல் துண்டி வரை -

சோமரத்ன அதிர்ச்சித் தகவல்

# கைதானவர்களின் உடலங்கள் மணியந்தோட்டத்தில் புதைப்பு



- சாட்சியமளிக்கத் தயார்
- தமிழ் மக்களுக்கு வாக்குறுதியளிக்கிறேன்

(கொழும்பு)

நல்லூர் செம்மணி தொடக்கம் கொழும்புத்துறை துண்டி வரையுள்ள இராணுவ முகாம்களில் கைதாகி சித்திரவதைகளால் உயிரிழந்த தமிழ் மக்களின் உடலங்கள் மணியந்தோட்டத்தில் புதைக்கப்பட்டது என்ற அதிர்ச்சித் தகவலை கிருஷாந்தி கொலை வழக்கின் மரண தண்டனைக் கைதி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அரசடியில் வாள்வெட்டு ஐவருக்கு விளக்கமறியல்

### யாழ்.நீதவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரசடிப் பகுதியில் மேற்கொள்ளப் பட்ட வாள்வெட்டுத் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு, இருவர் மீது வாள்வெட்டு 15ஆம் பக்கம் பார்க்க

கட்டுநாயக்கவில் கடும் சன நெரிசல்

## விமானங்களை தவறவிட்ட பயணிகள்

(நீர்கொழும்பு)

விமான நிலையத்தில் நிலவிய கடும் சன நெரிசல் காரணமாகப் பயணிகள் தமது விமானங் களைத் தவறவிட்ட சம்பவம் கட்டுநாயக்க சர்வ தேச விமான நிலையத்தில் பதிவாகியுள்ளது.

பயணிகளின் தரவுகளைப் பரிசோதிக்கும் கருமபீடம் மற்றும் குடிவரவு 15ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் செல்வாக்கு இனி எடுபடாது

### பொலிஸ்மா அதிபர்



(கொழும்பு)

அரசியல் செல்வாக்கின்றி பொலிஸார் செயற்படக்கூடிய சூழல் தற்போது உருவாக் கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய 15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு கிழக்கிலுள்ள படை முகாம்கள் விரைவில் இடமாற்றம் செய்யப்படும்

### அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த உறுதி



(கொழும்பு)

வடக்குக் கிழக்கிலுள்ள காணி களில் உள்ள இராணுவ முகாம்கள் வேறு இடங்க ளுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் ஏலவே அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாகவும் அதன் ஒரு கட்ட மாகவே இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் 15ஆம் பக்கம் பார்க்க

## முத்தையன்கட்டு இளைஞன் மரணம் அடையாள அணிவகுப்புக்கு ஏற்பாடு

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முத்தையன்கட்டுப் பிர தேசத்தில் இளைஞன் உயிரி ழந்தமை தொடர்பில் இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இரா ணுவச் சிப்பாய்கள் அடை யாள அணிவகுப்பிற்கு உட் படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யூ. வூட்லர் தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை 02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதான...

அண்மையில் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களுக்கு மேலதிகமாக செம்மணிக்கு அப்பால் பல முக்கிய ஆதாரங்களுடன் சாட்சியமளிக்கத் தயாராக இருக்கிறேன் என நான் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் வாக்குறுதியளிக்கிறேன் என்று அறிவித்துள்ள கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ 1996 களில் செம்மணி முதல் துண்டி முகாம் வரை சகல சோதனைச் சாவடிகளிலும் மக்கள் கைது செய்யப்பட்டதுடன் சித்திரவதைக் கூடங்களில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மணியம் தோட்டத்தில் புதைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கண்டறியப்பட்டு அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்ட செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் 141 மனித எச்சங்கள் கண்டறியப்பட்டிருக்கும் நிலையில் 1996 களில் செம்மணி முகாம் - துண்டி முகாம் வரை இடம்பெற்ற கைதுகள், படுகொலைகள் மற்றும் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் தொடர்பில் மரணதண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்ஷ முக்கிய வெளிப்படுத்தல்களைச் செய்துள்ளார். அவரது வெளிப்படுத்தல்களின் முதற்பகுதி வருமாறு,

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை மற்றும் செம்மணி மனிதப்படுகொலை தொடர்பில் இதனூடாக வெளிப்படுத்துகிறேன். கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதியன்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்துக்கு மேலதிகமாக விடயங்களை யாழ். மக்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த தமிழ்மக்களும் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு இதனை வெளிப்படுத்துகிறேன்.

எனது மனைவி ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் கடந்த 3 ஆம் திகதியன்று பத்திரிகைகளில் வெளியானது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த சகல விடயங்களும் உண்மையானவை என்பதை நான் யாழ். மக்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். அதில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களுக்கு மேலதிகமாக செம்மணிக்கு அப்பால் முக்கிய ஆதாரங்களுடன் சாட்சியமளிக்கத் தயாராக இருக்கிறேன் என நான் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் வாக்குறுதியளிக்கிறேன்.

1998 ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் செம்மணி மனிதப் படுகொலை தொடர்பில் வெளிப்படுத்தியபோது அவை நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இருப்பினும் கடவுளும் இயற்கையும் அவை உண்மை என்பதை நிரூபித்துள்ளன. 1998 ஆம் ஆண்டு எனக்கு மரணதண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டதன் பின்னர் எனது கூற்று தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஊடாக சிறைச்சாலை அதிகாரியான நாமல் பண்டார என்ற அதிகாரி மூலம் எனக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.

அக்கடிதம் அமைச்சராலேயே எழுதப்பட்டிருந்தது. நான் மேல் நீதிமன்றத்தில் கூறிய விடயம் கோபத்தில் கூறப்பட்டது எனவும் அதனை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் அந்தக் கடிதத்தை வாசித்ததன் பின்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அதனைக் கையளிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டபோது அந்த அதிகாரி கடிதத்தை வாசித்துவிட்டுத் திருப்பித் தாருங்கள் என்றார்.

நான் அந்தக் கடிதத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு மறுத்தபோது, அவர் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் என்னை மிலேச்சத்தனமாகத் தாக்கிக் கொல்ல முற்பட்டனர். இருப்பினும் அங்கிருந்த ஏனைய சிறைக்கைதிகளின் தலையீட்டால் அம்முயற்சி தோல்வியடைந்தது. அவ்வதிகாரிகளுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழு வழக்குத் தொடர்ந்திருந்த போதிலும் அதற்கு என்ன நேர்ந்தது என்று எனக்குத் தெரியவில்லை.

1999 ஆம் ஆண்டு குமார் பொன்னம்பலத்தை போகம்பரை சிறைச்சாலையில் சந்தித்தபோது, கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதியன்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விடயங்களை அவரிடம் கூறினேன். அப்போது அவர் என்னிடம் "பயப்படாமல் இருங்கள். ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்று உங்களை விடுவித்து செம்மணி வழக்கின் சாட்சியாளராக மாற்றுகிறேன்" எனக் குறிப்பிட்டார்.

1999 ஆம் ஆண்டு இந்த செம்மணி மனிதப்புதைகுழியைக் காண்பிப்பதற்காகச் சென்றபோது எனது சார்பில் முன்னிலையாவதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகைதருவதற்கு குமார் பொன்னம்பலத்துக்கு விமானவசதி வழங்கப்படவில்லை. அதன் பின்னர் அவர் திடீரெனப் படுகொலை செய்யப்பட்டார். அவரது மறைவையடுத்து அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவினால் அனுப்பி வைக்கப்பட்ட இரங்கல் செய்தியில், குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்ட தினத்துக்கு முன்னைய தினத்துக்குரிய திகதியே இடப்பட்டிருந்தது.

இவ்விடயம் அவ்வேளையில் ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டது. இதன்மூலம் குமார் பொன்னம்பலம் கொல்லப்படுவதற்கு முன்னரே ஜனாதிபதி சந்திரிக்கா அந்த இரங்கல் செய்தியை எழுதியிருந்தார் என்பது தெளிவாகிறது.

1999 ஆம் ஆண்டு நான் மனிதப் புதைகுழிகள் உள்ள இடங்களைக் காட்டிக்கொடுத்த வேளையில், அவற்றைக் காட்டிக்கொடுக்கவேண்டாம் எனவும் ஜனாதிபதி எனக்கு மன்னிப்பு வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டதன் காரணமாக சிலவற்றை மாத்திரம் காட்டிக் கொடுத்ததன் பின்னர் அதனைக் கைவிட்டுவிட்டேன்.

இவ்விடயம் தொடர்பில் மேலதிகமாக பல விடயங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுக்கிறது.

யாழ்ப்பாணத்தில் செம்மணி மாத்திரமன்றி பலசேனா தலைமையகம் முதல் 1996 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருந்த முகாம்களில் சித்திரவதைக்கூடங்கள் நடாத்திச்செல்லப்பட்டமையை அன்றைய பாதுகாப்புச்செயலாளர் தொடக்கம் சந்திரிக்கா வரை அறிந்திருந்தனர் என்பதை நான் யாழ். மக்களுக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரியப்படுத்துகிறேன்.

அரியாலை 7 ஆவது இலங்கை இராணுவக் காலாட்படையினால் செம்மணி முதல் துண்டி முகாம் வரை சகல சோதனைச்சாவடிகளிலும் மக்கள் கைதுசெய்யப்பட்டதுடன் சி3 முகாமின் 7 ஆவது இராணுவக் காலாட்படைக்கு உரிய சித்திரவதைக்கூடங்களில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மணியம் தோட்டம் என அறியப்படும் பிரதேசத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு புதைக்கப்பட்டன.

அது இராணுவக்கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதிகளுக்கு வெளியே இருந்த பிரதேசமாகும். அவ்வாறு சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் எனக்குச் சரியாகத் தெரியாவிட்டாலும் அந்தப் பிரதேசம் (மணியம் தோட்டம்) எனக்கு நன்றாகத் தெரியும் என்பதை நான் உங்களுக்குக் கூறுகிறேன். இதற்கு மேலதிகமாக பிரதான கைதுகள் செம்மணியில் இடம்பெற்றதுடன் அங்கு கைது செய்யப்படமுடியாதவர்கள் ஏனைய சோதனைச் சாவடிகளில் கைதுசெய்யப்பட்டனர் என்றார்.

(ந-7)

## முத்தையன்...

கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தின் இரண்டு குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன. இதுவரையில் 3 இராணுவ சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் இருவர் கொள்ளையிடுவதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்டு காயப்படுத்திய குற்றச்சாட்டில் மற்றைய சிப்பாய் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

இம்மூவரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். முகாமுக்குள் உட்பிரவேசிக்க முயன்ற சிவில் பிரஜைகளிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே குறித்த இராணுவ சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எவ்வாறிருப்பினும் இதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்துவதற்கு நீதிமன்றத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது என்றார். (ந-7)

## நாட்டில் மழைக்கு வாய்ப்பு

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய, வட மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணிக்கு 50 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

(ந-7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையின் அதிபர்

திருமதி சிவானி கேதீஸ்வரன்

அவர்கள் இலங்கை கல்வியியலாளர் சேவையிலும் இலங்கை கல்வி நிர்வாக சேவையிலும் சித்தியடைந்து உயர்பதவி நிலைக்குத் தெரிவாகியதையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் அவர் மேலும் உயர் பதவிகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/கலட்டி மெ.மி.த.க.பாடசாலை, யாழ்ப்பாணம்.



இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ். வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத் தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில்

தொடர்புகளுக்கு : 076 682 7368


No.139, Main Street, Jaffna

யாழ். நீதிமன்றத்துக்கு அருகாமையில்

(முன்பதிவு செய்து வரவும்) (5073)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு கம்பவாரிதி எழுதும் ஒரு பகிரங்க மடல்



அன்புக்குரிய கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு,

வணக்கம்! நலம் வேண்டிப் பிரார்த்திக்கிறேன். மீண்டும் சர்ச்சைக்கு ஆளாகியிருக்கிறீர்கள். அந்த விடயத்திற்கு வரும் முன்பாக, எனது நன்றியறிதலை, தங்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது.

சென்னைக் கம்பன்விழா மேடையில் உரையாற்றிய போது, என்னை மிகவும் உயர்த்திப் பேசினீர்கள். அந்த அன்பிற்கு எனது நன்றிகள்.

அந்த நன்றி அறிதலைக் கடந்து, சில உரைக்க வேண்டியிருப்பது பற்றிக் கவலையுறுகிறேன். உங்களாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிற வள்ளுவன்,

'நன்றி அறிதல்' எனும் அதிகாரத்திற்கு அப்பால்,

'நடுவு நிலைமை' என்ற அதிகாரத்தை வைத்ததன் நோக்கம் தாங்கள் அறியாதது அல்ல.

அந்த வள்ளுவ நெறி நின்றே இக் கடிதத்தை வரைய முனைகிறேன்.

கற்பனை மிகுந்த உங்களது இயல்பினாலோ என்னவோ, உங்கள் எழுத்திலும், பேச்சிலும்கூட மிகைத் தன்மை குவிந்து விடுகிறது. எவரையேனும் புகழத் தலைப்பட்டால், விண்ணளவாய்ப் புகழ்ந்து விடுகிறீர்கள்.

இகழத் தலைப்பட்டால் பாதாளம் வரையில் தாழ்த்தி இகழ்ந்து விடுகிறீர்கள். இந்த மிகைதான் உங்களை எப்போதும் சிக்கலுக்கு ஆளாக்கி விடுகிறது. இப்போதும் ஆளாக்கி இருக்கிறது.

எப்போதும் உங்களது எழுத்தும், பேச்சும், சர்ச்சைகளை உருவாக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள் போல. அங்ஙனமாய்த் தான் எண்ணத் தோன்றுகிறது! சமூகத்தின் கவனம் எப்போதும் உங்களைச் சூழ்ந்திருக்க வேண்டும் என்கின்ற, எண்ணத்தின் வெளிப்பாடுதான் அதுவோ? என் ஊகம் உண்மையாயின், நீங்கள் தவறிழைக்கிறீர்கள்.

இனி விடயத்திற்கு வருகிறேன். நடந்து முடிந்த சென்னைக் கம்பன் விழாவில் பேசும்போது தெய்வ இராமனுக்குச் 'சித்த சுவாதீனம் இருக்கவில்லை' என நீங்கள் கூறப்போய், பத்திரிகைகளிலும், இணையங்களிலும், தொலைக்காட்சிகளிலுமாக சர்ச்சைகள் தீயாய் வெடித்திருக்கின்றன.

இன்று பலரும் உங்களைக் கடுமையாய்த் தாக்கி வருகிறார்கள். அத் தாக்குதல்கள் நாளுக்குநாள் எல்லைமீறிப் போய்க் கொண்டிருக்கின்றன.

நீங்களோ, எதுவும் நடக்காதது போல மௌனம் காக்கிறீர்கள். மக்கள் கருத்துக்கு நீங்கள் செய்யும் மரியாதை இவ்வளவுதானா? கவலையாய் இருக்கிறது.

உங்களை விமர்சிப்பவர்களையும் குற்றம் சொல்லிவிட முடியாது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் தாம் தெய்வமாகப் போற்றி வரும் இராமனை, இன்றும் இவ்வுலகில் அறம் தழைக்கக் காரணமாய் இருக்கும் இராமனை, சான்றோர் பலர் உச்சிமேல் வைத்து உவந்த இராமனை, நீங்கள் 'பைத்தியக்காரன்' என்று நாவினால் சுட்டால், யாருக்குத்தான் கோபம் வராது?

நீங்கள் சொன்ன 'சித்த சுவாதீனம் அற்றவர்' என்ற தொடருக்கான இன்றைய அர்த்தம் மற்றவர்களுக்குப் புரியவேண்டும் என்பதற்காகத்தான் மேற்சொன்ன வார்த்தையினை மிக்க மனவருத்தத்தோடு பயன்படுத்தியிருக்கிறேன்.

இராமனைக் குறித்து அத்தகைய ஒரு வார்த்தையை நீங்கள் சொன்னதாய் எழுதுகையில்கூட, வலி தாங்காமல் என் கரங்கள் நடுங்குகின்றன.

நீங்களே நினைத்துப் பாருங்கள். உங்கள் வீட்டில், உங்களுக்காக நடைபெறும் ஒரு விழாவில் எவரேனும் வந்து, உங்களைச் 'சித்த சுவாதீனம் அற்றவர்' என்று கூறினால், அதனை உங்களால் தாங்கிக் கொள்ளமுடியுமா? உங்களை விடுங்கள்! உங்களைச் சார்ந்தவர்கள் தானும் அப்படிச் சொன்னவரை, அங்கிருந்து ஒழுங்காகத் திரும்பிச் செல்ல அனுமதித்திருப்பார்களா?

கம்பன் சபை அனுமதித்திருக்கிறது. அது அச்சபையின் சான்றாண்மையின் அடையாளம்.

ஒருவன், சான்றோர் கூடிய சபை ஒன்றில் தன் நிலை அறியாமல் கண்டபடி பேசினானாம். அவனை மடக்கி, பேசவிடாமல் இழிவு செய்தால், பலரும் கூடிய அச்சபையின் முன் அவனது மானம் போய் விடுமே என நினைந்து, அச் சபையிலிருந்த கற்றறிந்த சான்றோர்கள் தம் கருணையினால், அவன் பேச்சிற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் மௌனித்துக் கேட்டிருந்தார்களாம்.

இச்செய்தியை நாலடியாரில் வரும் ஒரு பாடல் கூறுகிறது.

**புல்லா எழுத்தின் பொருளில் வறுங்கோட்டி**
**கல்லா ஒருவன் உரைப்பவும் கண்ணோடி**
**நல்லார் வருந்தியும் கேட்பரே மற்று அவன்**
**பல்லாருள் நாணப் பரிந்து.**

இந்தப் பாடல் தான் எனது ஞாபகத்திற்கு வருகிறது.

கம்பன் விழாச் சபையை நீங்கள் சாதாரணமாக நினைத்துவிட்டீர்கள். கம்பன் கழகங்களை ஆரம்பித்து, கிட்டத்தட்ட நூறாண்டுகள் ஆகப் போகின்றன. கம்பனைக் கடவுளாகவே நேசித்து வந்த 'கம்பனடிப் பொடி' என்கின்ற ஒரு மாமனிதன் தான், காரைக்குடியில் கம்பன் கழகத்தை முதன் முதலில் ஆரம்பித்து வைத்தார்.

பின்னர், கம்பன் கழகங்கள் பலவற்றை ஊர்தோறும் ஆரம்பிக்கவும், அவரே வழி செய்தார். அந்தச் சான்றோனின் சிந்தனையில் பிறந்த வித்து, இன்று தமிழ் நாட்டைக் கடந்து, பாரதத்தையும் தாண்டி, உலக நாடுகள் பலவற்றிலும் விருட்சமாகி விரிந்து நிற்கின்றது.

இவையெல்லாம் நீங்கள் அறியாத செய்திகள் அல்ல. கோபக்காரரான கம்பனடிப்பொடி மட்டும் அன்று நீங்கள் பேசிய சபையில் இருந்திருந்தால், என்னாகியிருக்கும் என்று நினைத்துப் பார்க்கிறேன். நினைக்கவே அச்சமாக இருக்கிறது.....

கம்பனடிப்பொடி வரைந்த கோட்டிற்குள் நின்று, இன்று எத்தனையோ கம்பன் விழாக்கள் சிறப்பாக நடந்து முடிந்துவிட்டன. அந்த விழாக்களில் எத்தனையோ நிறை அறிஞர்கள் கலந்து கொண்டு, தம் அறிவாற்றலால் கம்பகாவியம் எனும் வைரத்தை, பட்டை தீட்டி மிளிரச் செய்தார்கள், செய்து கொண்டிருக்கிறார்கள்.

கம்ப காவியத்துள் இருக்கும் சர்ச்சைக்குரிய இருட்பகுதிகளுக்குக் கூட, அவர்கள் தம் மதிநுட்பத்தால் ஒளி பாய்ச்சி, கம்பனையும் காவியத்தையும் மதிப்புறச் செய்தனர்.


அத்தகையோரால் வளர்க்கப்பட்ட சபைதான் கம்பன்விழாச் சபை. அந்த நிறைத் தன்மையால் தான் அன்றைய உங்களின் சர்ச்சைக்குரிய பேச்சை அச் சபை சகித்திருந்தது.

நீங்களோ, கற்றோர் சபையென்று கருதாமலும் வார்த்தைகளின் வலிமை அறியாமலும், காசில் கொற்றத்து இராமனைப் பழி சொல்லி, கம்பன்விழாச் சபையைக் களங்கப்படுத்தி விட்டீர்கள். அது எத்தனை பெரிய தவறு?....

இதனை, மரபு அறியாததால் வந்த தவறென்பதா? அல்லது நமது மண்ணின் இயல்பு அறியாததால் வந்த தவறென்பதா? அதுவுமன்றேல் மன்றின் உணர்வறியாததால் வந்த தவறென்பதா? எனக்குப் புரியவில்லை.

இராமனைப் பார்த்து வாலி சொன்னாற்போல, 'திகைத்தனை போலும் செய்கை' என்றே, உங்களது செயலுக்கும் நாம் சமாதானம் காண வேண்டியிருக்கிறது. இங்கு திகைத்தனை என்ற வார்த்தையை நீங்கள் சொன்ன அர்த்தத்தோடு நான் பிரயோகிக்கவில்லை. அதனை மட்டும் இவ்விடத்தில் உறுதி செய்ய விரும்புகிறேன். சென்னைக் கம்பன் கழகத்தின் வரலாற்றை நீங்கள் அறிவீர்கள்.

இஸ்லாமியரான, மறைந்த நீதிபதி மு.மு.இஸ்மையில் அவர்களும், திராவிடர் கழகக் கொள்கைகளில் ஊறித் திளைத்திருந்த, 'அருளாளர்' மறைந்த ஆர்.எம். வீரப்பன் அவர்களும் தான், முன்பு இக்கழகத்தின் தலைமையேற்று வழி நடத்தினார்கள். அவர்கள் இருவரும் தத்தம் தனி நிலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தமது மதத்தையோ, கொள்கையையோ கம்பனுக்குள் நுழைக்காமல் கழகத்தைக் காவல் செய்தார்கள்.



நீங்களோ! அவர்கள் காட்டிய வழியை உணராது, உங்களது கொள்கையை மட்டும் மனதில் வைத்து, கம்பனது மேடையில் இராமனை இழிவு செய்திருக்கிறீர்கள். உங்களது செயலால், பலரதும் விமர்சனத்திற்கு ஆளாகி, சென்னைக் கம்பன் கழகமே இன்று ஆடிப்போய்க் கிடக்கிறது.

ஒரு கழகத்தை உருவாக்குவதிலும் விழா எடுப்பதிலும் உள்ள, சிரமத்தை அறிந்திருந்தால் நீங்கள் அங்கு அப்படிப் பேசியிருக்கமாட்டீர்கள்.

தற்போது கழகத்தின் தலைமையேற்றிருக்கும் 'நயவுரை நம்பி' ஜெகத்ரட்சகன் அவர்கள், மத நம்பிக்கை இல்லாக் கட்சியின் ஒரு பிரதிநிதியாய் இருந்து கொண்டும்,

தான் கொண்டிருக்கும் சமய நம்பிக்கையில், யாரோடும் சமரசம் செய்து கொள்ளாது நின்று நிலைக்கிறார்.

ஆழ்வார் பாசுரங்களுள் தம்மைக் கரைத்துக் கொண்ட அவர், 'ஆழ்வார்கள் ஆய்வு மையம்' எனும் அமைப்பை உருவாக்கி, ஆண்டு தோறும் விழா எடுத்தும் வருகிறார்.

அதுபோலவே இப்போது கழகச் செயலாளராய்ப் பொறுப்பேற்றிருக்கும், 'டாக்டர்' சாரதா நம்பியாரூரன் அவர்களும், நம் சைவத்தையும், தமிழையும் தம் கண்களாய்ப் போற்றும் பேரறிஞர். மறைமலையடிகளின் மருகளாய் வாய்த்த மாண்புடையவர். அவர்களது அழைப்பை மதித்துத் தான், தமிழக முதல்வர், இவ்வாண்டுக் கம்பன் விழாவில் கலந்து சிறப்பித்தார்.

கழகத்தின் பொன்விழா நிறைவின்போது முதலமைச்சரை அழைத்து, விழாவைச் சிறப்பிக்கலாம் என அவர்கள் கருதினார்கள் போலும், அவர்களின் நல்நோக்கத்தைப் புரிந்து கொள்ளமுடிகிறது.

சிலர் அதனையும் குறை சொல்கிறார்கள்.- அது தவறு!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## நாடளாவிய சைக்கிள் ஓட்டப்போட்டியில் வடமாகாண வீரர்கள் சாதனை



நாடளாவிய ரீதியில் ஆண்டு தோறும் நடத்தப்படும் சைக்கிள் ஓட்டப்போட்டி இம்முறை கிழக்கு மாகாணத்தில் நடைபெற்றது. பாசிக்குடாவிலிருந்து பொத்துவில் வரை இடம்பெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டியில் சுமார் 150 கிலோ மீற்றர் தூரத்தினை கடந்து வட மாகாண வீரர்கள் சாதனை படைத்துள்ளனர்.

ஆண்டுதோறும் நடைபெறும் சைக்கிள் ஓட்டப்போட்டி இம்முறை கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை யன்று பாசிக்குடாவிலிருந்து பொத்துவில் வரை நடைபெற்றது.

இப் போட்டியில் நாடளாவிய ரீதியில் இருந்து பல போட்டி யாளர்கள் பங்குபற்றியிருந்தனர். இதில் 40 வயதிற்கு உட்பட்டவர் களுக்கான போட்டியில் யாழ்ப்பா ணத்தைச் சேர்ந்த பா.விகிஸ்ண தாஷ் முதலாம் இடத்தையும், முல்லைத்தீவைச் சேர்ந்த ப. பால ரசன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் 40 வயதிற்கு மேற் பட்டோருக்கான போடியில் பா.ஜன கன் மற்றும் து.கோபிநாத் ஆகியோர் பங்குபற்றி குறிப்பிட்ட தூரத்தை நிறைவு செய்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (3)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## அடுத்த சுற்றுக்கு முன்னேறியது பாசையூர் சென்.அன்ரனீஸ்



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுமதியுடன் நவக்கிரி எல்லாளன் விளையாட் டுக்கழகம் தமது 23 ஆவது நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி அணி மோதியது.


இதன்போது ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா இரு கோல் களைப் பதிவு செய்ததால் வெற்றி, தோல்வியை தீர்மானிப்பதற்கு வழங்கப்பட்ட சமநிலைத் தவிர்ப்பு உதையில் 4 : 3 என்ற கோல் கணக்கில் பாசையூர் அன்ரனீஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக் குத் தகுதி பெற்றது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக றஜிந்தன் தெரிவு செய்யப்பட்டார்.(3)



தேசியவீரன் பண்டாரவன்னியனின் ஞாபகார்த்த முல்லைத்தீவு மாவட்ட சதுரங்கப் போட்டி கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்களும் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

## அவுஸ்திரேலிய மண்ணில் கோலியின் சாதனையை முறியடித்த பிரெவிஸ்





தென் ஆபிரிக்க அணி அவுஸ்தி ரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வந்தது. முதலில் 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் நடைபெற்றது. முதல் 2 போட்டி களில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றன.

இரு அணிகளுக்கு இடையிலான மூன்றாவது மற்றும் இறுதி ரி-20 ஆட்டம் நேற்று முனதினம் நடை பெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா பந்துவீச் சைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத் தாடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கள் இழந்து 172 ஓட்டங்களை குவித்தது.

அதிரடியாக ஆடிய டிவால்ட் பிரெவிஸ் 26 பந்தில் 6 சிக்சர்களை விளாசினார்.

அடுத்து ஆடிய அவுஸ்திரேலியா அணி 19.5 ஓவர்களில் 8 விக் கெட்டுகள் இழப்பிற்கு 173 ஓட்டங் களை எடுத்து வெற்றி பெற்றது. கிளென் மேக்ஸ்வெல் பொறுப்புடன் ஆடி 36 பந்தில் [illegible] சிக்சர்களை விளாசினார்.

இந்நிலையில், இந்த தொடரில் தென்னாபிரிக்காவின் டிவால்ட் பிரெவிஸ் ஆட்டம் ரசிகர்களிடையே வியப்பை ஏற்படுத்தியது.

இந்தப் போட்டியில் 6 சிக்சர்களை விளாசியதன் மூலமாக விராட் கோலியின் சாதனையை டிவால்ட் பிரெவிஸ் முறியடித்தார்.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக ரி-20 கிரிக்கெட்டில் அதிக சிக்சர்களை விளாசிய வீரர் என்ற பெருமையை டிவால்ட் பிரெவிஸ் பெற்றுள்ளார்.

விராட் கோலி 10 ரி-20 போட்டிகளில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 12 சிக்சர்களை விளாசியதே சாதனையாக இருந்தது. அந்த சாதனையை டிவால்ட் பிரெவிஸ் வெறும் 3 போட்டிகளில் 14 சிக் சர்களை விளாசி முறியடித்துள் ளார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போஷாக்கான- போதுமான உணவின்றி

# வாடும் இலங்கையர்கள்

## ஐ.நா.விசேட அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் 16 வீதமான குடும்பங்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் கடுமையான போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போதைக்கு இலங்கையில் நான்கில் ஒரு குடும்பம் போஷாக்கான உணவு இன்றி அல்லது போதுமான உணவு இன்றி வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான குடும்பங்களில் மூன்று வேளை உணவில் ஒரு வேளை உணவு குறைக்கப்பட்டுள்ளது அல்லது உண வின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இலங்கையில் ஐந்து வயதுக்குக் குறைவான பிள்ளைகள் கடுமையான போஷாக்கின்மை காரணமாக பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (க)

## மூன்றாம் தவணை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

பாடசாலைகளின் மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. 2025 ஆம் ஆண்டின் அரச பாடசாலைகளுக்கான இரண்டாவது பாடசாலைத் தவணை கடந்த 7 ஆம் திகதி நிறைவடைந்தது.

இதன்படி, குறித்த பாடசாலைகளின் 3 ஆம் தவணை கற்றல் நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது. இதேவேளை முஸ்லிம் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)


மணிவிழா வாழ்த்து




திருமதி. ஜறீன் லக்ஷ்மி அன்ரன்

(SLTS-I, Dip.in.Dance, Dip in Education)

சேவைக்கால விபரம்

(31.07.1989 - 18.08.2025)

- யா/ கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயம்
- யா/சென் மேரீஸ் வித்தியாலயம்
- யா/ சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

மாணவர்களின் கல்விக் கண் திறந்திட அயராது உழைத்த ஆசிரியரின் அளப்பரிய சேவையை உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்...
பாடசாலைச் சமூகம்
யா/சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

(1456)


## 'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே'

# அரசாங்க ஊழியர்கள் தொடர்பில் பிரதியமைச்சர் சுனில் வடகல



(கொழும்பு)

தவறு செய்யும் அரச ஊழியர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி அமைச்சர் சுனில் வடகல எச்சரித்துள்ளார்.

தனியார் வானொலியொன்றிற்கு கருத்து வெளியிடும் போதே பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வடகல மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தில் தற்போதைக்கு 21 ஆயிரம் வெற்றிடங்கள் நிலவுகின்றன.

ஆயினும் அதனைக் கருத்திற் கொள்ளாது தவறு செய்த 300 பொலிஸார் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோன்று தவறு செய்யும் அரச ஊழியர்கள் எவராக இருப்பினும் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசியல்வாதிகள், அதிகாரிகள், பொது மக்களை இணைக்கும் செயற்றிட்டமொன்று விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-8)

# அமெரிக்க போர்க்கப்பல் கொழும்பு துறைமுகத்தில்

(கொழும்பு)

அமெரிக்காவின் போர்க் கப்பலான சாண்டா பார்பரா கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் நீண்ட கால நட்புறவின் அடையாளமாக அமெரிக்க கடற்படையின் சான்டா பாப்ரா கப்பலின் வருகை காணப்படுவதாக இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவும் இலங்கையும் 75 ஆண்டுகளுக்கும் மேலாக பொருளாதாரம், அபிவிருத்தி மற்றும் பல்வேறு நோக்கங்களை இலக்கு வைத்து நீண்ட காலமாக தமது நட்புறவைப் பேணி வருகின்றது.

அமெரிக்க கடற்படைக்கும் இலங்கை கடற்படைக்கும் உள்ள நட்புறவு மற்றும் கடற்பாதுகாப்பிற்கான இலங்கையின் பங்களிப்புகளை சான்டா பாப்ரா கப்பல் ஊக்கமளிக்கின்றது.

அத்துடன் இலங்கையின் பல்வேறு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில் அமெரிக்கா பெருமை கொள்கிறது என்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தொடர்ந்தும் தெரிவித்துள்ளது. (க-8)

## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம் (வ-து)-கரவெட்டி

பதிவு இலக்கம்:- J/1553 பதிவு திகதி:-16.02.1971

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

எமது சங்கத்தின் புதிய கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுக் கூட்டங்கள் எதிர்வரும் 23.08.2025 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பின்வரும் விபரப்படியான இடங்களில் நடைபெற உள்ளது. 30.06.2025 ஆம் திகதியில் வாக்களிக்க தகைமை பெற்ற உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட அழைப்பிதழ் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவே அனைவரும் தமது கிளையின் கிளைப் பொதுக்கூட்டங்களுக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

| இல | கிளை இல | கிளை விபரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | 01 | அல்வாய் தெற்கு (A) (மாலிச்சந்தி) | யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் |
| 02 | 02 | அல்வாய் தெற்குமத்தி (முத்துமாரியம்மன) | அறிவு அருள் சனசமூக நிலையம் |
| 03 | 03 | கட்டைவேலி | யா/ஞானசாரியார் கல்லூரி |
| 04 | 04 | கல்வத்தை | யா/நெல்லியடி மெ.மி.த.பாடசாலை |
| 05 | 05 | கணுவில் | பிரதேச சபை (வட.தெ.மே) பாலர் பாடசாலை நெல்லியடி |
| 06 | 06 | கரவெட்டி மேற்கு (அந்திரான்) | யா/வதிரி திரு இருதய கல்லூரி |
| 07 | 07 | கரவெட்டி கிழக்கு (தச்சை ஐங்கரன்) | கிளைக்கட்டிடம் |
| 08 | 08 | கோவிற்கடவை | கோவிற்கடவை சன சமூக நிலையம் |
| 09 | 09 | நெல்லியடி | நெல்லியடி சன சமூக நிலைய சன்மார்க்க பாலர் பாடசாலை |
| 10 | 10 | நுகவில் | கிளைக்கட்டிடம் |
| 11 | 11 | சந்திரா | நாமகள் சன சமூக நிலையம் |
| 12 | 12 | சண்டில் | கிளைக்கட்டிடம் |
| 13 | 13 | துன்னாலை தெற்கு (குடவத்தை) | கிளைக்கட்டிடம் |
| 14 | 14 | கிளான் | யா/துன்னாலை தெற்கு அ.த.க பாடசாலை |
| 15 | 15 | வதிரி | பிரதேசசபை (வட.தெ.மே) பாலர் பாடசாலை வதிரி |
| 16 | 16 | யார்க்கரு | யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் |
| 17 | 19 | துன்னாலை வடக்கு (A) (வல்லியானந்தம்) | வல்லியானந்தம் சன சமூக நிலையம் |
| 18 | 20 | துன்னாலை வடக்கு(B) (துன்னாலைமத்தி) | யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் |
| 19 | 21 | அல்வாய் தெற்கு (B) (மனோகரா) | மனோகரா பாலர் பாடசாலை |
| 20 | 23 | கிழவித்தோட்டம் | கிழவித்தோட்டம் சன சமூக நிலையம் |
| 21 | 24 | இராசகிராமம் | இராசகிராமம் சன சமூக நிலையம் |
| 22 | 25 | வதிரி வடக்கு (டைமன்) | வதிரி தமிழ் மன்ற நூலகம் |
| 23 | 30 | அல்லையம்பதி | அல்லையம்பதி பாலர் பாடசாலை |

18.08.2025
021 226 3263

செயலாளர்
கட்.நெல்.ப.நோ.கூ. சங்கம்

(C-3666)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 19 ஆம் திருவிழாவான கார்த்திகைத் திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. இதன்போது முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் பூஞ்சப்பறத்தில் எழுந்தருளி அருள் பாலித்தனர்.

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் குழு இசை நிகழ்வில் பாட்டு- இந்தியத் துணைத் தூதரக மாணவர்கள், வயலின்-கே.வேலதீபன், மிருதங்கம்-மு. சுலக்சன், தபேலா-ந.கேதாரநாத், நெறியாள்கை-திருமதி. வாசஸ்பதி றஜீந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு- பொன்ஶ்ரீ. வாமதேவன், வயலின் - இ. நிறோசன், மிருதங்கம்- இ.பாலஶ்ரீ, முகர்சிங்- நி.மோகனதர்சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

## நல்லூர் உற்சவகால அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் "அருளுரை" இன்று திங்கட்கிழமை இரவு 8 மணி முதல் 8.30 மணி வரை சிவகுரு ஆதீன மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு சிவஞான தேசிகனே சாகாவரம் தருவாய்! " எனும் தலைப்பில் அருளுரை ஆற்றுவார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 160 | 220 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 170 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 150 | 150 | 200 |
| தக்காளி | 150 | 200 | 150 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 250 | 320 | 300 | 230 | 350 |
| கரட் | 400 | 500 | 600 | 450 | 500 |
| பூசணி | 100 | 100 | 100 | 80 | 80 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 | 150 |
| வாழைக்காய் | 150 | 100 | 100 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 100-250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 160 | 130 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 300 | 400 | 400 |
| வெண்டக்காய் | 150 | 100 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 320 | 300 | 250 | 400 |
| பயற்றங்காய் | 200 | 250 | 150 | 250 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 200 | 250 |
| பீற்றூட் | 100 | 100 | 150 | 100 | 150 |
| கறிமிளகாய் | 400 | 450 | 400 | 450 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 300 | 180 | 300 |
| போஞ்சி | 700 | 700 | 700 | 550 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | -- | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 40-120 | 100 | 70 | 120 |
| தேசிக்காய் | 300 | 100 | 200 | 280 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 160 | 120-180 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 600 | 800 | 550 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 200 | 300 | 250 | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 50 | 120 | 100 | 70 |
| வல்லாரை | 80 | 70 | 70 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 150 | 100 | 200 |

## திருட்டுப் பொருட்களுடன் இருவர் கைது



(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடத்தடிப் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி மடத்தடியில் ஆட்கள் இல்லாத வீடொன்றிற்குள் நுழைந்து தொலைக்காட்சிப் பெட்டி உள்ளிட்ட ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் பொருட்களை திருடி குடத்தனை பகுதியில் தலைமறைவாகி இருந்த நிலையில் மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் திருட்டுப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. கைதான சந்தேக நபர்களைப் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-30)




## கா! நல்லைக் குமரேசனே!

கலியுகக் கந்தனே கலியுகம் படும்பாட்டை
கண்கொண்டு பார்க்கவில்லையோ
வலிகொண்டு கலாசார கோலங்கள் யாவுமே
வழிமாறி யழிதல்முறையோ
மலிவாகிச் சீர்கேடு மன்றத்தி லாடியே
மத்தளங் கொட்டலழகோ
நலியுமின் நிலைமாற்றி நன்னெறியை காட்டவா
நம்நல்லைக் குமரேசனே!


கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## நல்ல வரம் ஒன்று தந்திடப்பா

நல்லூரில் வீற்றிருந்தே அகிலத்தை அரசாளும்
நாம் வணங்கும் முருகப்பா நலமுடனே நாம் வாழ
நல்ல வரம் தந்திடப்பா நல்லூர் கந்தப்பா
தந்தைக்கு உபதேசித்த சுவாமிநாதன் நீயப்பா
வேலாயுதத்துடன் வண்ண மயிலேறி உலாவந்து- எம்மவர்க்கு
நல் உபதேசம் செய்திடப்பா வடிவேல் முருகப்பா
உலகெங்கும் நல்லாட்சி மலர்ந்திடவே- வரம் அருள வேண்டும்.
மாண்புடனே நல்வாழ்க்கை நாம் வாழ்ந்திட பலம் தருவாய் குமரப்பா

மு.விக்னேஸ்வரன்,
ஓய்வு நிலை அதிபர், கோப்பாய்.

## தொண்டைமானாறு செல்வச்சந்நிதியானின் வருடாந்த மஹோற்சவம்




(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இம் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 1 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும், 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம் பெற்று மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (3)

## "சிவதொண்டன் மலர்" வெளிவந்து விட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தின் 89 ஆவது "சிவதொன்டன் மலர்" (இதழ் - ஜுலை, ஓகஸ்ட்) வெளிவந்து விட் டது.

இம் மலரில் திருநின்ற நல்லூர், மறவனே, நற்சிந்தனை, நல்லூர் முருகன், ஓர் அமுதக் குளிகை போன்ற பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘இலங்கையின் கழுத்தை இறுக்குங்கள்’

# ஐ.நாவிடம் கோரும் மீனாட்சி கங்குலி



**(கொழும்பு)**

**இலங்கையில் கடந்தகால மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுத்த கட்டமைப்பு ரீதியான காரணிகள் இன்றும் தொடர்வதை ஐக்கிய நாடுகள் சபையின் சமீபத்திய மனித உரிமைகள் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத் துக்கான பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரி மைகள் பேரவையின் கூட்டத் தொடரை முன்னிறுத்தி வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை, இலங்கை யின் மனித உரிமைகள் நிலை குறித்த ஒரு கவலைக்குரிய சித்திரத்தை முன் வைப்பதுடன், சர்வதேச சமூகம் ஏன் இலங்கை விடயத்தில் தனது கண் காணிப்பைத் தளர்த்தக்கூடாது என்பதற்கான ஒரு எச்சரிக்கை மணியாகவும் உள்ளது.

ஐ.நா. அறிக்கை குறிப்பிடும் கட்டமைப்பு ரீதியான காரணிகள் என்பது தற்காலிகப் பிரச்சினைகள் அல்ல மாறாக, அவை நாட்டின் நிர்வாக, சட்ட மற்றும் பாதுகாப்பு இயந் திரங்களில் ஆழமாக வேரூன் றியுள்ள நீண்டகாலப் பிரச்சினைகளாகும்.

சர்வதேச கண்டனங்கள் இருந்தபோதிலும், தன்னிச்சையான கைதுக ளுக்கும், சித்திரவதைக ளுக்கும் வழிவகுக்கும் பயங் கரவாதத் தடைச் சட்டம் இன்னும் முழுமையாக நீக்கப்படவில்லை.

போர்க் குற்றங்கள் மற்றும் பாரிய மனித உரிமை மீறல் களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மீது நம்பகரமான விசாரணைகள் இன்றி, அவர்கள் தொடர்ந்தும் பதவிகளில் நீடிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்தகால மீறல் களுக்குப் பொறுப்பான வர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கான முயற்சிகள் இல்லாமை மற்றும் உள்நாட்டு நீதிப் பொறிமுறைகள் தோல்வியடைந்தமை என்பன சர்வதேசத்தின் தலையீட்டை வலியுறுத்துகிறது.

மனித உரிமைகள் கண் காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளர் குறிப்பிடும் ஐ.நா. உயர்ஸ்தானிகரின் பொறுப் புக்கூறல் செயற்றிட்டம் என்பது, இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரிய மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைச் சேகரித்து, பாதுகாத்து, பகுப்பாய்வு செய்யும் ஒரு சர்வதேசப் பொறிமுறையாகும். இலங்கை இத்தகைய சர்வதேசப் பொறிமுறைகளைத் தொடர்ச்சியாக நிராகரித்து, நாட்டின் இறைமையில் தலையிடுவதாகக் குற்றம் சுமத்துகிறது. ஆகவே, எதிர்வரும் ஜெனீவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான ஒரு புதிய தீர்மானத்தின் மூலம் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை மேலும் வலுப்படுத்தவும், அதன் ஆயுட் காலத்தை நீட்டிக்கவும் சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை வலுப்படுத்துகிறது.

எனவே இலங்கையின் கட்டமைப்பு மாறாத வரை, சர்வதேசத்தின் கண் காணிப்பும் தளரக்கூடாது என மனித உரிமைகள் கண் காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி வலியுறுத்தியுள்ளார். (க-8)

# அலங்காரா! நல்லூரா ‘கோமாதா தரிசனம்’ சூரிய பகவான் தரிசனம், அருள் மிகு தம்ப, விம்ப, கும்ப தரிசனம், திருப்புகழ் ஓதி பேரருள் பெறுவோம்.

**திருவடி தரிசனம்**

**பிறவியலை யாற்றினிற் புகுதாதே -**
**பிரகிருதி மார்க்கமுற் றலையாதே,**
**உறுதிகுரு வாக்கியப் பொருளாலே -**
**உனதபத காட்சியைத் தருவாயே.**
**அறுசமய சாத்திரப் பொருளோனே,**
**அறிவுளறி வார்க்குணக் கடலோனே-**
**குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே,**
**குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.**

பிறப்பு எனும் அலைகள் வீசும் ஆற்றிலே புகுந்து **அலைச்சல் உறாமல்,** பிரபஞ்ச விடயங்களாம் மாயா வழிகளிற் பொருந்தி **அலைச்சலுறாமல்,** உறுதியான ஆன்மலாபத்தைத் தரவல்ல குரு உபதேச மொழியின் பொருள் மூலமாக **உன் திருவடித் தரிசனப் பேற்றைத் தந்தருளுக.** ஆறு சமயத்திற்கும் பொருளானவனே! அறிவின் உட் பொருளை அறிபவர்களது பெரியோருக்கு குணக் கடலில் விளங்குபவனே! **அகத்திய முனிவர் துதிக்கும் முத்தமிழ் பெருமானே! குமரகுரு பெருமானே அலங்காரா! கார்த்திகையானே உனது பத காட்சியைத் தருவாயே.**

முருகனுக்கு உகந்தபூ- றோசா நிற அரலிப்பூ முருகனுக்கு உகந்த அமுது- திணை மா- இத் திருப்புகழ் கார்த்திகை நட்சத்திரத்திலும் மற்றும் நாட்களிலும் தினம் ஓதுவோம்.

ஆவணி மாதப்பிறப்பில் நேற்றையதினம் பட்டிப் பொங்கல் பார்த்து **கோமாதாவை வணங்குவது ஓர் சிறப்பு** நாம் இறந்த பின் உயிர் இயமராயர் கையில் சிக்குப்பட்டால் எமக்காக **இயமனிடம் வாதாடும்** ஜீவனாங்களில் கோமாதா என்பதனை புராண மூலம் அறியலாம்.

ஆலயத்தில் முன்னோர் காட்டிய வழியில் திருமுறைகளை ஓதி புதிய யாகசாலை கும்பத்தின் முன் ஓமக் குண்டத்தில் 108 அருள் உயர்ந்த திரவியங்கள் அக்கினியில் ஆகுதி செய்யும் போது சிவாச்சாரியார் மந்திரம் ஓதும் போது, **நாமும் அலங்காரா! நல்லூரா** எனவும் **திருப்புகழ் ஓதி,** ஒன்று சேர்ந்த ஓமப் புகையானது எழுந்து, அருள் முறையாக சாலை அமைப்பில் ஓமக் குண்டத்தில் இருந்து, அருள் வழியில் மண்ணையும் விண்ணையும் அடைந்து, அதன் மூலமாக அண்டவெளி இறையாற்றலானது, யாகசாலை ஓமக் குண்டத்தில் அருள் பொழிந்து, பின் யாக குண்டத்தில் இருந்து நூல் வழியாக கும்பத்தில் சேர்ப்பார்கள். இவ்வாறு 24 நாட்களில் தினம் இரு தடவையாக, 48த் தரம் சேர்த்து தீர்த்தத் தினம்.அந்த அருள் கும்ப நீர் கற்பகக்கிரகத்தில் அநுக்கிரக அலங்கார சக்தி வாய்ந்த வேலில் அபிஷேகம் செய்வதும்,அங்கு **இறைவனிடம் பூரண அனுக்கிரகம் கிடைத்து நாமும் முருகப் பெருமானது பூரண அனுக் கிரகம் பெறுவோம்.**

யாக சாலை தரிசனம் விழாக்காலம் அதி உன்னதமானது, யாகசாலை அமைப்பு அதி விசேஷம் அனந்த ஆசனம், பத்ம ஆசனம், சிம்ம ஆசனம், யோக ஆசனம் விமல ஆசனம் ஆக **பஞ்ச ஆசனம்** வேறு எந்த வழிபாட்டிலும் தரிசிக்க முடியாது. யாக சாலை **முன் கவசம்** முன்பக்கம் 48 வைரவ தரிசனம் ஓர் சிறப்பு கும்பா அபிஷேகம் பின்னர் 48 நாட்கள் மண்டலாபிசேகம் நடப்பது போல் 48 வைரவர் தரிசனம் புதியதாக அமைந்த யாகசாலை முன் திருப்புகழ் ஓதி, வணங்கி இறை திருவருள் பேரருள் பெற்று உய்வோமாக.

நேற்றைய தினம் **ஆவணி மாதம் முதல் ஞாயிறு தினம் சூரிய வழிபாடு** செய்து நாம், ஏழு குதிரையில் வரும் சூரிய பகவானது அருள் நம் **எழும் பிறவி நீங்கவும், அக இருள் நீங்கவும் வழிபடுவோம்.**

[illegible] ஓர் தம்பம் உள்ளது. அதன் அமைப்பு நல் சிறப்பாக யாழ். மண்ணில் பனை மரத்தின் **உச்சியில் சேவலும் மயிலும் தாங்கிய தம்பம்** அதன் ஆபரணமாக இருக்கு, யசூர், சாம, அதர்வனம் ஆடையாக ஆகிய வேதங்கள் அருள் பொழிந்த தம்பத்தையும் வழிபட்டு நல்லூர் அலங்கார முருகனது அருள் பெறுவோம்.

ஆலயங்களில் நித்திய பூஜை நடக்கின்றது. அதில் நேரும் குறைபாடுகளுக்கும் பரிகாரமாக **நைமித்த மாகிய** விழாக்கள் நடைபெறுகின்றன.


**ஆலயத்தின் பெருமை விழாக்களால்** மிகுதியாகிறது.

**பயனும் மிகுதியாகிறது அருளும் மிகுதியாகிறது** விழாவைச் சிறப்பு என்று சொல்வார்கள்.

**“சிறப்பொடு பூசனை செல்லாது, வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு”**
என திருவள்ளுவர் நைமித்திகமாகிய
விழாவைச் சிறப்பென்று குறிக்கிறார்.

விழாக்களுக்குள் சிறந்தது **திருத்தேர்விழா.** அதைப் பிரம்மோற்சவம் என்பர். இவ்வாறாக நல்லூரா, அலங்காரா அனைத்து திருவிழாவை நடத்தியவர்கள், வணங்கியவர்கள், அடியவர்கள் **இறைவன் திருப்புகழ் ஓதி அமைதியுடன் பிரார்த்தித்து பேரருள் பெறுவதுடன், அனேக ஆலயங்கள் புணருத்தானம் நிறைவேறவும், பல வருட கால மாத தாமதம் பயன் மிகுதியாகவும், ஆலய பெருமை நிறைந்த விழாவும், சிறப்பாக நடைபெறவும் பிரார்த்திப்போம் அலங்காரா நல்லூரா.**

(C- 3665)




**க.கு.க.சிவபாலன்**
**போசகர் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# விற்கப் போகிறீர்களா? வாங்குவதற்கு நான் தயார்

## கூகுளை வாங்கத் தயாராகும் தமிழர்



(வோஷிங்டன்)

தொழில்நுட்ப உலகில் தனக்கென தனியிடத்தை பல ஆண்டுகளாகத் தக்க வைத்து வருகிறது, கூகுள் நிறுவனம். கூகுள் ப்ரவுசர் (தேடுபொறி), வரைபடம், மின்னஞ்சல் என பலவற்றையும் கூகுள் வழங்கி வருகிறது. 2008 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கூகுள் ப்ரவுசர் உருவாக்கத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சுந்தர் பிச்சைக்கும் முக்கிய பங்களிப்பு உண்டு.

இந்த நிலையில், தற்போது வெளிவரும் மற்றும் அறிமுகப்படுத்தப்படும் அனைத்து நிறுவனங்களின் மொபைல் போன்களிலும் கூகுள் க்ரோம் மட்டுமே இருப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. மற்ற தேடுபொறிகளுக்கு இடம்கொடுக்காமல், கூகுள் ப்ரவுசர் மட்டும் ஆதிக்கம் செலுத்துவதாக குற்றச் சாட்டுகள் எழுந்தன. இதனையடுத்து, கூகுள் ஏகபோக உரிமையை அனுபவிப்பதாகக் கூறிய கொலம்பியா நீதிமன்றம், கூகுள் நிறுவனத்துக்கு எதிராக உத்தரவுகளைப் பிறப்பித்தது.

இதனிடையே, கூகுளின் சில தயாரிப்புகளை விற்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாகக் கூறப்பட்டு வருகிறது.

கூகுள் ப்ரவுசரை விற்க வேண்டியிருந்தால், தங்களிடம் வழங்க லாம் என்று அமரிக்காவைச் சேர்ந்த சென்னை வம்சாவளியான அரவிந்த் ஸ்ரீனிவாஸ் என்பவர் கூறியுள்ளார்.

கூகுள் ப்ரவுசருக்காக அவர் 34.5 பில்லியன் டொலர் (சுமார் ரூ.3.02 லட்சம் கோடி) வழங்க முன்வந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (க-8)

# இரைக்காய்க் காத்திருப்பவர்களை இரையாக்கும் இஸ்ரேல்

## இதுவரை 1,760 பேர் படுகொலை



(இஸ்ரேல்)

காசாவில் கடந்த மே மாத இறுதியிலிருந்து உணவு மற்றும் உதவிப்பொருட்களுக்காக காத்திருந்த 1,760 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

இவ்அறிக்கைப்படி, "மே 27 முதல் ஆகஸ்ட் 13 வரை, உதவி கோரும் போது குறைந்தது 1,760 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக நாங்கள் பதிவு செய்துள்ளோம்.

994 பேர் காசா மனிதாபிமான அறக்கட்டளை தளங்களுக்கு அருகிலும், 766 பேர் விநியோக வாகனங்களின் பாதைகளிலும் கொல்லப்பட்டனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 1 ஆம் திகதி ஐ.நா அறிவித்த இறப்பு எண்ணிக்கை 1,373 ஆகும். இந்நிலையில் கடந்த 15 நாட்களில் 387 பேர் உதவிக்காக காத்திருந்தபோது கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேலிய பீரங்கி தாக்குதலில் குறைந்தது 38 பேர் கொல்லப்பட்டதாக காசாவின் சிவில் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்தது. இதில் உதவிக்காக காத்திருந்த 12 பேர் அடங்குவர்.

இருப்பினும், இஸ்ரேலிய இராணுவம் ஹமாஸின் இராணுவத் திறன்களை அழிக்க தங்கள் படைகள் செயற்படுவதாகக் கூறுகிறது. மேலும் பொதுமக்கள் உயிரிழப்புகளைக் குறைக்க இராணுவம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருவதாக இஸ்ரேல் கூறுகிறது.

இதற்கிடையே காசாவில் பட்டினியால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 200 ஐ கடந்துள்ளது.

மேலும், அண்மையில் காசாவில் 5 அல் ஜசீரா பத்திரிகையாளர்களை மருத்துவமனையில் வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி கொலை செய்தது. இதன் மூலம் 2023 முதல் காசாவில் இஸ்ரேல் கொன்று குவித்த பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை 238 ஆக அதிகரித்துள்ளது. (க-8)

# மக்களைக் கொன்று குவிக்கும் மியான்மர் இராணுவம்

(நைப்பிடோவ்)

மியான்மரின் மொகோக் நகரிலுள்ள ரத்தினக் கல் சுரங்க மையத்தில் அந்த நாட்டு இராணுவம் நடத்திய விமானத் தாக்குதலில் 16 பெண்கள் உட்பட 21 பேர் உயிரிழந்தனர்.

மியான்மரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங் சான் சூகியின் அரசைக் கவிழ்த்துவிட்டு இராணுவம் கடந்த 2021 பெப்ரவரி மாதம் ஆட்சியைக் கைப்பற்றியது. அதை எதிர்த்து தீவிரமாக நடைபெற்ற ஜனநாயக ஆதரவுப் போராட்டங்களை இராணுவம் அடக்குமுறையைக் கையாண்டு நசுக்கியது.

அதைத் தொடர்ந்து, பல்வேறு ஆயுதக் குழுக்கள் இராணுவத்துக்கு எதிராக போரிட்டு சில பகுதிகளைக் கைப்பற்றிவருகின்றன.

அந்த ஆயுதக் குழுக்களுக்கு எதிராக இராணுவம் கண்மூடித்தனமாக வான் வழித்தாக்குதல் நடத்துவதாகவும், அதில் ஏராளமான அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்துவருவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. (க-8)



# பாகிஸ்

# உயிர்க

❖ 400 ஐத்

❖ தொடர்ந்து

❖ ஐந்து மா

❖ மீட்புப்பண

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஏற்


ஏற்பட்ட வெள்ளப்பெ

பலியாகியுள்ளதாகவு

வெள்ளத்தில் தத்தளி

பெய்யும் சாத்தியம் இரு

தாகவும் தெரியவருகிற



பாகிஸ்தானில் பெய்து வரும் கனமழையால் வடமேற்கு மாகாணங்களின் பல்வேறு பகுதிகளில் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, கைபர் பக்துன்க்வா

மா

யி

டு

ந

மி

# போர் நிறுத்த

## போரை நிறுத்துவ

### ரொனால்ட் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

உக்ரைனில் போர் நிறுத்தத்தைத் தவிர்த்து நிரந்தர அமைதி ஒப்பந்தத்திற்கு நேரடியாகச் செல்ல விரும்புவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்

ளா

பி

ட்ர

பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்தானில் பயங்கர மழை

# காக்க பரிதவிக்கும் மக்கள்

## த் தாண்டிய இறப்பு எண்ணிக்கை

## ந்து மழைபெய்யும் அபாயம்

## மாவட்டங்களை மூழ்கடித்த வெள்ளம்

## ணிகள் தடைப்படும் அபாயம்

)

**ஏற்பட்டுள்ள கடும் மழை காரணமாக ப்பெருக்கில் சிக்கி சுமார் 400 பேர் கவும் பாகிஸ்தானின் பல மாகாணங்கள் தளித்து வருவதாவும் தொடர்ந்து மழை இருப்பதனால் மக்கள் அச்சமடைந்துள்ள நகிறது.**



மாகாணத்தில் பாயும் சுவாட் நதியில் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளதால் மாகாணத்தின் முக்கிய நகரமான மின் கோரா நீரில் மிதக்கிறது. மின்சாரம், தகவல் தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டு, பொது மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

400 இற்கும் மேற்பட்டவர்கள் மழை தொடங்கியது முதல் தற்போது வரை உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டின் பேரிடர் ஆணையம் தெரிவித்திருக்கிறது. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் சுமார் 200 பேர் உயிரிழந்துள்ளதாக அதிர்ச்சித் தகவலும் வெளியாகியுள்ளன.

குறிப்பாக, மலைப் பகுதிகளைக் கொண்ட கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் மட்டும் பலர் உயிரிழந்திருப்பதாகவும், பலர் காணாமல் போயிருப்பதாகவும் அந்நாட்டின் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்திருக்கிறது. இதில் பெரும்பான்மையானோர் வெள்ளத்திலும், வீடுகள் இடிந்து விழுந்ததிலும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பனேர், பஜௌர், ஸ்வாட், ஷாங்க்லா, மன்சேரா மற்றும் பட்டாகிராம் ஆகிய மலை மாவட்டங்களை பேரிடர் பாதித்த பகுதிகளாக மாகாண அரசு அறிவித்துள்ளது. புனேர் மாவட்டத்தில் உட்கட்டமைப்பு கடுமையாக சேதமடைந்திருக்கிறது.

விவசாய நிலங்கள் கடுமையாகச் சேதமடைந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். அம் மாவட்டத்தில் மட்டும் 93 உடல்கள் கண்டெடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இடிபாடுகளில் இருந்து உடல்களை மீட்டெடுக்கும் பகுதிகளிலும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 9 மாவட்டங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் சுமார் 2000 மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். அப்பகுதிகளின் சாலைகள் வெள்ளத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதால் மீட்புப் பணியாளர்கள் நடந்து சென்று மக்களை மீட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணியில் பாகிஸ்தான் அரசு தீவிரமாக செயற்பட்டு வருகிறது. மீட்பு படையினர் மற்றும் தன்னார்வ அமைப்பினர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும், வீடுகளை இழந்த குடும்பத்தினருக்கு உணவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-8)



## ந்தத்தை விட

## துவதே சிறந்தது

### ம்ப் சுட்டிக்காட்டு

ளார்.

புடினுடனான சந்திப்பிற்குப் பின்னர், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் போர் நிறுத்தங்கள் பெரும்பாலும் நிலைத்து நிற்காது என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்தநிலையில் அவர், உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை இன்று திங்களன்று வோஷிங்டனில் சந்தித்து, ஒரு சமாதான ஒப்பந்தத்திற்கு உடன்படுமாறு வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, ட்ரம்புடன் தொலைபேசியில் பேசிய உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, உண்மையான, நீடித்த அமைதிக்கு அழைப்பு விடுத்தார். அதே நேரத்தில் போர் நிறுத்தப்பட வேண்டும் மற்றும் கொலைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கிடையில், சமாதானத்துக்கு நிபந்தனையாக, சபோரிஜியா மற்றும் கெர்சனில் ஆகிய இடங்களில் ரஷ்யப்படைகள் தமது முன் வரிசைகளை முடக்கும் அதேநேரம், டான்பாஸின் டொனெட்ஸ்க் பகுதியிலிருந்து உக்ரைன் வெளியேற வேண்டும் என்று புடின் ட்ரம்ப்பிடம் ஒரு சமாதான சலுகையை வழங்கியதாகக் கூறப்படுகிறது.

எனினும் டான்பாஸின் கட்டுப்பாட்டை விட்டுக் கொடுக்க உக்ரைனின் ஜனாதிபதி சில நாட்களுக்கு முன்னர் மறுப்பு வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத சொத்துக் குவிப்பு முன்னாள் அமைச்சருக்கு அழைப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவை விசாரணைக்கு நாளை மறுதினம் முன்னிலையாகுமாறு சட்ட விரோத சொத்து சேகரிப்பு விசாரணைப் பிரிவு பொலிஸார் அழைப்பு விடுத்துள்ளனர்.

பணமோசடி குற்றச்சாட்டின் கீழ் மேற் கொள்ளப்படும் விசாரணை தொடர்பில் வாக்குமூலமொன்றைப் பெறுவதற்காகவே அவர் பொலிஸாரினால் அழைக்கப்பட்டுள்ளார்.

தனது வருமானத்துக்கு அதிகமான சொத்துக்களை அவர் சேகரித்துள்ளதாக மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடொன்றின் அடிப்படையில் குறித்த விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (க)

# உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள சீனா செல்கிறார் பிரதமர் ஹரிணி

(கொழும்பு)

ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 2025 உச்சிமாநாடு எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. சீனாவின் தியான்ஜின் நகரில் நடைபெற உள்ள இந்த உச்சிமாநாட்டில் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ஹரிணி அமரசூரிய எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீனாவுக்கு விஜயம் மேற்கொள்கின்றார். மூன்று நாட்கள் சீனாவில் தங்கியிருக்கும் அவர் , சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உள்ளிட்ட அந்நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுப்படவுள்ளார்.

இதேவேளை ஷங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட உறுப்பு நாடுகளின் தலைவர்களையும் பிரதமர் ஹரிணி சந்தித்து பரஸ்பர பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க உள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அமெரிக்க விஜயத்திற்கு முன்னர் ஷங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள திட்டமிட்டிருந்தார். எனினும் தற்போது அமெரிக்க விஜயத்தை நிறைவு செய்து, அங்கிருந்து ஜப்பான் செல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையிலேயே பிரதமர் ஹரிணி அமரசூரிய மேற்குறித்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளார். (க-8)

# தபால் ஊழியர்களின் விடுமுறை இரத்து

(கொழும்பு)

வேலை நிறுத்த போராட்டம் அறிவிக்கப்பட்டதையடுத்து நேற்று முதல் அஞ்சல் சேவையின் அனைத்து அதிகாரிகளின் விடுமுறையையும் இரத்து செய்துள்ளதாக தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

தபால் தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தத்தால் நாடு முழுவதும் அஞ்சல் மற்றும் விநியோக சேவைகளில் ஏற்படக்கூடிய இடையூறுகளை கவனத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நடவடிக்கையை மீறி வேலைநிறுத்தத்தைத் தொடரப் போவதாக தொழிற்சங்கத் தலைவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# வைக்கோலை எரியூட்டுவதை நிறுத்துங்கள் மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர்

(கண்டாவளை)

சிறுபோக அறுவடைக்கு பின்னர் எஞ்சியுள்ள வைக்கோலை கால் நடைத் தீவனங்களுக்குப் பயன்படுத்துவதற்கும் மண்ணுடன் சேர்வதற்கும் ஏற்ற வகையில் வழி செய்யவேண்டுமே தவிர வைக்கோலுக்கு தீ வைப்பதை விவசாயிகள் நிறுத்தவேண்டும் என்று பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் வீ.சோதிலட்சுமி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணை மடுக்குளத்தின் கீழான சிறுபோக அறுவடை நிறைவு பெற்றுள்ள நிலையில் வயல் நிலங்களில் எஞ்சியிருக்கின்ற வைக்கோலுக்கு விவசாயிகளால் கால் நடைகளுக்கான தீவனமாக பயன்படுத்தப்படாத அளவிற்கு தீயிட்டு எரிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் கால்நடைப் பண்ணையாளர்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன இரணைமடுக்குளத்தின் கீழ் சுமார் இருபத்தி இரண்டாயிரம் ஏக்கரிலும் அதற்கு மேலதிகமாக கழிவு நீரைப்பயன் படுத்தி நான்காயிரம் ஏக்கரிலும் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் நிறைவு பெற்றவுடன் எஞ்சிய வைக்கோலுக்கு தீ வைக்கப்பட்டு இவ்வாறு எரியூட்டப்பட்டு வருகிறது.

ஆகவே இந்த அறுவடையின் பின் எஞ்சி இருக்கின்ற வைக்கோலை தீயிட்டு கொளுத்துவதை விவசாயிகள் தவிர்த்து கொண்டு ஜீவகாருண்யத்துடன் கால் நடைகளுக்கு உணவாக பயன்படுத்துவதற்கு இடம் அளிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (த-315)

# இன்று ஒரு தகவல் 427

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## நிறைவு

ஒரு ஊர்லே ஒரு மகாராஜா இருந்தார். மிகவும் நல்லவர். தர்மசிந்தனை உள்ளவர். எல்லோருக்கும் எல்லா உதவியும் செய்வார். யாருக்கும் "இல்லை" என்று சொல்லமாட்டார்.

ஒரு சமயம் அவர் ஒரு பெரிய காட்சிசாலையைத் திறந்து வைத்தார். அதிலே ஏகப்பட்ட பொருட்களை எல்லாம் இலவசமாக கொடுப்பதற்காக. யார் வேண்டும் என்றாலும் வரலாம். எந்தப் பொருளை வேணும் என்றாலும் எடுத்துக் கொண்டு போகலாம். காசு கிடையாது. ஆண் - பெண் எல்லோரும் வந்து அவங்க அவங்க பிரியப்படி தங்களுக்குப் பிடித்தமானதை எடுத்துக் கொண்டு போகலாம். அது மாதிரி ஏற்பாடு.

இந்தக் காட்சி சாலைக்கு நிறையபேர் வந்தார்கள். அவர் அவர்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டு போனார்கள்.

சிலபேர் அவங்களுக்குத் தேவையான வேட்டி -சட்டைகளை எடுத்துக் கொண்டு போனார்கள்.

சிலபேர் வந்தார்கள். அங்கேயிருந்த விலை உயர்ந்த நகைகளை எடுத்துக் கொண்டு போனார்கள். சிலபேர் அங்கேயிருந்த நல்லவற்றை எடுத்துக் கொண்டு போனார்கள்.

சிலபேர் இரும்புப் பெட்டிகளை எடுத்துக் கொண்டு போனார்கள். சிலபேர் நல்ல பழவகைகளை எடுத்துக் கொண்டார்கள். எல்லாருக்கும் முழுமனநிறைவு, நிறைவோட திரும்பிப் போனார்கள்.

ஒரே ஒரு வயசான அம்மா... அவங்க மட்டும் அங்கே வந்தார்கள் ஆனால் எதையுமே தொடவில்லை. மனநிறைவு இல்லை.

எல்லோரும் ஆச்சரியமாக அந்தம்மாவைப் பார்த்தார்கள். ஊர்மக்கள் எல்லோருக்கும் மனநிறைவு... இந்தம்மாவுக்கு மட்டும் மனநிறைவு இல்லையா? என்ன காரணமா இருக்கும்?

"உங்களுக்குப் பிடித்ததை எடுத்துக் கொள்ள வேண்டியது தானே " என்றார்கள்.

"இங்கே இருக்கிற எந்தப் பொருளும் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை!" நான் மகாராஜவைப் பார்க்கவேண்டும்" என்றார்.

அங்கே இருந்த திவான் ஓடிப் போய் மகாராஜாவிடம் சொன்னார்கள்.

உடனே மகாராஜா ஒரு யானை மேலே ஏறி அந்த அம்மாவைப் பார்க்க வந்துவிட்டார்.

அந்த அம்மா மன்னரைப் பார்த்து, "மகாராஜா! கீழே இறங்கி வாருங்கள், ஒரு முக்கியமான விடயம் பற்றி உங்களிடம் பேச வேண்டும்!" என்றார்கள்.

அரசர் யானையிலேயிருந்து கீழே இறங்கினார்.

அந்த அம்மா ராஜாவோட வலது கையைப் பிடித்துக் கொண்டு, "மகாராஜா! இப்ப நீங்கள் எனக்குச் சொந்தமாயிட்டீர்கள். காட்சிச் சாலையிலே உள்ள சின்னச்சின்ன பொருட்களையும். விளையாட்டுப் பொம்மைகளையும் நான் விரும்பவில்லை. உங்களைப் பெறவே நான் விரும்புகிறேன் நீங்க எனக்குச் சொந்தமாகியதால் இந்த ராஜ்யத்தின் செல்வம் எல்லாம் இப்ப எனக்குச் சொந்தமாகிவிட்டது! என்றார்.

மகாராஜா மலைத்துப்போய் நின்றார். அந்த அம்மாவைக் கடைசி வரைக்கும் தன் அரண்மனையிலே வைத்து தாய்மாதிரி கவனித்துக் கொண்டார்.

தமக்கு பலவிதமான ஆசைகள் அதனாலே அந்தந்த ஆசைக்குரிய பொருட்களைத் தேடிச் செல்கிறோம். இப்படிச் செய்வதனால் திருப்தியே உண்டாகிறதில்லை. ஆசைக்கு அடிமையாகிறவர்கள் பிச்சைக்காரர்களுக்கும் பிச்சைக் காரர்களாக ஆகிவிடுகிறார்கள்.

"உலக இச்சைகளையும் பொருட்களையும் துறந்து இப்பரந்த பிரபஞ்சத்தின் மூலம் பரம்பொருளைப் பெற்று விட்டால் உங்களுடைய எல்லா ஆசைகளும் - பூர்த்தியாகிவிடும்!" - என்கிறார் சுவாமி சிவானந்தர்.

அம்மா எப்படி ஞானமுள்ள அந்த வயசான மகாராஜவைச் சொந்தமாகப் பாராட்டி அவருடைய செல்வத்துக்கெல்லாம் அதிபதியா ஆகினார்களோ, அப்படியே எல்லா சௌகரியங்களும் உங்களைத் தேடி வரும் என்றார் அவர். இந்த காலத்தில் எல்லாம் இதுமாதிரி உள்ளவர்களைப் பார்ப்பது ரொம்ப அபூர்வம்.

ஒரு நண்பரைப் பார்த்துக் கேட்டேன். "ஏன் சார்- அந்த மகாராஜா மாதிரியே இப்ப ஒருத்தர் தன்னுடைய வீட்டுக்கு உங்களைக் கூப்பிட்டு "எதை வேணும் என்றாலும் எடுத்துக் கொண்டு போ" என்று சொன்னால் முதல்லே எதை எடுப்பீர்கள்" என்று கேட்டேன்.

"முதலிலே அவரைத்தான் எடுப்பேன்! அவரை எடுத்துக் கொண்டு போய் எங்கேயாவது காட்டிலே விட்டு விட்டு வந்து அதற்கு பின் அந்த வீட்டிலேதான் இருப்பேன்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சித்தர்களும், சித்தமருத்துவமும் பௌர்ணமியும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

முழுநிலவு, முழுமதி அல்லது பௌர்ணமி என்பது புவியில் இருந்து காணும் போது நிலவு முழுமையான வெளிச்சத்துடன் தோற்றமளிக்கும் நாளாகும்.

முழு நிலவு என்பது ஒரு இயற்கையான நிகழ்வு மட்டுமல்ல. வானவில் அறிவியலின்படி முக்கியமான பகுதியும் கூட. இது நமக்கு சந்திரனின் அமைப்பு மற்றும் பிரபஞ்ச இரகசியங்களை விளங்கிக்கொள்ள உதவுகின்றது.

சித்தர்களும் பௌர்ணமியின் மகத்துவத்தை அறிந்தே இருந்தனர். சித்தர்கள் தமிழ் மண்ணில் தோன்றிய மகான்கள். அவர்கள் ஞானம், மருத்துவம் யோகம், ஆன்மீகம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கினர். சித்தர்கள் இயற்கையின் சக்திகளுடன் நெருக்கிய தொடர்பு வைத்திருந்தனர். அவர்களின் வாழ்வியலில் முழுநிலவு (பௌர்ணமி) ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. சித்தர்கள் வாழ்வில் பௌர்ணமி ஒரு ஆன்மீக மற்றும் விஞ்ஞான திருப்புமுனை.

இன்றும் தமிழ் நாட்டில் உள்ள சித்தர் தலங்களில் (காசி விசுவநாதர் கோயில், பழனி மலை) பௌர்ணமி நாட்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. சித்தர்கள் பௌர்ணமியை ஆன்மீக சாதனைக்குரிய நாளாக கருதுகிறார்கள். சித்தர்கள் பௌர்ணமியில் இரவுகளில் தீட்சை பெறுவது, தியானம் செய்வது, மந்திரங்கள் ஓதுவது போன்றவற்றை மேற்கொண்டுள்ளனர்.

நிலவின் ஒளி மனதை தூய்மைப்படுத்தி ஆன்மீக ஒளியைப் பெற உதவும் என நம்பினர். சித்தர்கள் மூலிகைகளை பறிக்க பௌர்ணமி இரவுகளை தேர்ந்தெடுப்பார்கள். பூமியிலுள்ள மூலிகைகளின் சக்தி, பௌர்ணமியில் அதிகமாக இருக்கும்.

சித்தர்கள் பௌர்ணமியில் குண்டலினி யோகம், சூரிய நமஸ்காரம், பிராணாயாமம் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். இந்நாளில் சந்திரனின் ஆற்றல் உடலிலுள்ள நாடிகளை சீராக்கும். சித்தர்கள் செம்பு, இரசம் போன்றவற்றை பரிசோதிக்க பௌர்ணமியை பயன்படுத்தினர். பௌர்ணமியில் செய்யப்படும் இரசவாத சித்திகள் வெற்றி பெறும் என நம்பினர்.

அகத்தியர் 'அகத்தியர் கோட்பாடுகள்' எனும் நூலின் 12 ஆவது அத்தியாயத்தில் (சந்திர சிகிச்சை) முழுவதும் பௌர்ணமியின் உடல் மற்றும் மனோ தத்துவ பலன்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

பௌர்ணமியில் சந்திரனின் ஒளியில் உள்ள வெள்ளைக்கதிர்கள் இரத்தத்தில் உள்ள கெட்ட நச்சுக்களை நீக்கும். (அகத்தியர் கோட்பாடு 12.47). போகர், பௌர்ணமியை 'சித்தர்களின் ஆன்மீக ஆயுதம்' என்று குறிப்பிடுகிறார். அதன்படி பௌர்ணமி தினத்தன்று சந்திர நமஸ்காரம் (Moon salutation). நாடி சுத்தி பிராணாயமம், குண்டலினி தியானம் மேற்கொள்ளுமாறு அதன் முறைகள் பற்றியும் விபரித்துள்ளார். போகர் கூற்றின் படி பௌர்ணமியன்று செய்யப்படும் இத்தியானம் 7 மடங்கு விரைவாக குண்டலினி சக்தியை எழுப்பும். போகர் கூற்றின்படி பௌர்ணமி யோகத்தின் பலன்களாவன, ஆயுளை 12 வருடங்கள் நீடிக்கச் செய்யும், நரம்பு மண்டலம் சீராகும், மன அமைதி மற்றும் ஞானம் கிடைக்கும். ஆனால் குரு முன்னிலையிலேயே பயிற்சி மேற்கொள்ள வேண்டுமெனவும் போகர் வலியுறுத்துகிறார்.



போகர் போதனைகளின் படி பௌர்ணமி என்பது இயற்கையின் ஆன்மீக ஆற்றல் வங்கி ஆகும். திருமூலர் தனது அற்புதமான திருமந்திர நூலில் (சந்திர சக்தி பாதம், அதிகாரம் 7) பௌர்ணமியை "ஆன்மாவின் தூய்மைப் புரட்சிக்கான காந்த சக்தி" என்று போற்றுகிறார்.

**"நாடியில் நிலவொளி நீராய் பாயின்**
**நரம்புகள் நாதமாய் ஒலிக்கும்"**
**திருமந்திரம் - 745**

நவீன அறிவியலுடன் திருமூலரின் கருத்துக்களை ஒப்பிடின், திருமூலரின் கருத்துப்படி சந்திரனொளியில் மன அழுத்தம் குறைப்பு, NASA ஆய்வுகளின்படி melatonin hormone சீராக்கம், பௌர்ணமியில் மூலிகை சக்தி அதிகரிப்பு, 2022 ஆய்வு அறிக்கை phytochemicals ஊட்டம்40% அதிகரிப்பு. நாடிசுத்திக்கு சந்திரனின் கதிர்கள், circadion rhythm சீரமைப்பு. திருமூலரின் திருமந்திரம் பௌர்ணமியை பிரபஞ்சத்தின் ஆன்மீக ஆற்றல் மின்நிலையம் எனக் காட்டுகிறது. இன்றைய quantum physics கூட நிலவொளியில் உள்ள bio-photons பற்றி ஆராயும் போது பண்டைய ஞானம் வியக்க வைக்கிறது.

திருமூலர் பௌர்ணமியன்று சந்திர ஒளியின் தாக்கம் மனதையும், உடலையும் நுண்ணிய பரிமாணத்திற்கு கொண்டு செல்லும் என அவர் உணர்ந்தார். அவர் கூற்றுப்படி சந்திர சக்தியானது மனதில் விநயம், அமைதி, ஞானத் தெளிவு போன்ற மனநிலை களைத் தூண்டுகிறது.

அகத்தியர் வைத்திய சூதமணி இல் பாடல் 119இல் பௌர்ணமி இரவில் மூலிகைகளைச் சேகரிக்க உகந்த நேரமாகவும், சந்திர ஒளி மூலிகைகளின் உயிர் சக்தியை அதிகரிக்கும்.

**பொன்வரும் பௌர்ணமியில் போதியில் பிறந்தால்**
**பழி இல்லாப் பிறவி அது பரிபூரண பாக்கியம்**

அதாவது பௌள்ணமியில் சந்திர சக்தியின் கருவறை நூல் உச்ச நிலை என்பதால், கருப்பை, நரம்பு மற்றும் சுரப்பிகளைத் தூண்டி பிறப்பை துரிதப்படுத்தும். சந்திரனின் ஈர்ப்புசக்தி கர்ப்பிணிப் பெண்ணின் உடலில் உள்ள நீர்ச் சுழற்றியையும், கருப்பையின் ஈரப்பதத்தையும் மாற்றி பிரசவத்தை தூண்டும். பௌர்ணமியன்று சந்திரன் முழுமையாகப் பிரகாசிப்பதால் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய அனைத்து பஞ்சபூதங்களின் இயக்கத்தில் அதிர்வுகளை ஏற்படுத்தும்.

இதனால் மனிதர்கள், விலங்குகள், மூலிகைகள், கடல் அலைகள், மழை சுழற்சி ஆகிய அனைத்திலும் தாக்கம் ஏற்படும். சந்திர ஒளி பூமியின் இயற்கை இயக்கத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும். அந்த மாற்றத்தை உயிரணுக்கள் கூட உணர முடியும். சித்த மருத்துவம் கூறும் பௌர்ணமியின் முக்கியத்துவத்தை நவீன அறிவியல் எவ்வாறு தொடர்பை ஏற்படுத்துகிறதெனில், நிலவொளியில் Melatonin secretion இனை 12-18 % குறைக்கிறது.

தூக்க ஹோர்மோன்(NASA 2021) இதனால் பௌர்ணமியில் தூக்கம் குறைவாக இருக்கும். Switzerland இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இரத்த அழுத்தம் பௌர்ணமி தினங்களில் 3-5 mmhg அதிகரிப்பு கண்டறியப்பட்டுள்ளது. பௌர்ணமியில் இரத்த ஓட்டம் வேகமாக இருக்கும். மன அழுத்த ஹோர்மோன் (Cortisol) 14% அதிகரிக்கிறது. மன அழுத்தம் காரணமாக பௌர்ணமியில் தியானம் செய்வது பரிந்துரைக்கப்படுகின்றது. 7.5% மனநல அவசர நிலைகள் பௌர்ணமியில் அதிகரிக்கின்றது. (journal of psychiatry 2022) பௌர்ணமியில் மன நோய் அதிகரிக்கும். பால் புரதங்கள் நிலவொளியில் bio-active ஆகின்றன. இதனால் பாலை பௌர்ணமியில் வைத்து மருந்து செய்யப்படுகின்றது. நிலவொளி vitamin D செயற்பாட்டை 15% அதிகரிக்கும்.

பௌர்ணமியில் என்புகள் பலம் பெறும். பௌர்ணமி தினங்களில் மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சைகளில் 23% அதிக இரத்தப்போக்கு ஏற்படுகின்றது. (jphns hopkins hospital data) பௌர்ணமியில் அறுவை சிகிச்சை தவிர்க்க வேண்டும்.

சித்த மருத்துவத்தின் பௌர்ணமி - ஞானம் இன்றைய அறிவியலால் ஆதரிக்கப்படும் ஒரு அற்புதமான இணைப்பு. இவை இரண்டையும் ஒருங்கிணைத்தால் மனித ஆரோக்கியத்திற்கு புதியவழி திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 847





அமுதா! விழுந்து கிடந்த மரத்தைப் பார்த்தாயா? அதனடியில் என்றாள்.

ஆமாம், பார்த்தேன், அந்தக் கதி நமக்கும் ஏற்பட்டு விடப்போகிறது. சீக்கிரம் மண்டபத்துக்குப் போய்ச் சேரலாம்!" என்று கூறிவிட்டு அமுதன் பூங்குழலியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மண்டபம் இருந்த திசையைக் குறிவைத்து விரைந்து சென்றான்.

இருவரும் மண்டபத்தை அடைந்தார்கள். சொட்ட நனைந்திருந்த துணிகளிலிருந்து தண்ணீரைப் பிழிந்தார்கள். துணியைப் பிழிந்த பிறகு பூங்குழலி தன் நீண்ட கூந்தலையும் பிழிந்தாள். பிழிந்த ஜலம் மண்டபத்தின் தரையில் விழுந்து சிறு கால்வாய்களாக ஓடியது.

"அடாடா! மண்டபத்தை ஈரமாக்கி விட்டோமே?" என்றாள் பூங்குழலி.

"மண்டபத்துக்கு அதனால் தீங்கு ஒன்றுமில்லை. ஜலதோஷம் காய்ச்சல் வந்து விடாது! நீ இப்படிச் சொட்ட நனைந்து விட்டாயே?" என் றான் சேந்தன் அமுதன்.

"நான் கடலிலேயே பிறந்து வளர்ந்தவள். எனக்கு இன்னொரு பெயர் 'சமுத்திர குமாரி'. என்னை மழைத் தண்ணீர் ஒன்றும் செய்து விடாது" என்றாள் பூங்குழலி.

அவளுடைய உள்ளம் அப்போது தஞ்சாவூர்க் கோட்டைக்கு அருகிலிருந்த சாலை ஓர மண்டபத்திலிருந்து நாகைப் பட்டினத்து சூடாமணி விஹாரத்துக்குப் பாய்ந்து சென்றது.

'சமுத்திரகுமாரி' என்று அவளை முதன் முதலாக அழைத்தவர் அந்தச் சூடாமணி விஹாரத்தில் அல்லவா இருந்தார்?

"பூங்குழலி என்னுடைய நந்தவனமும் குடிசையும் சிறிது தூரத்திலேதான் இருக்கிறது.

மழைவிட்டதும் அங்கே போய் விடலாம். என் தாயார் உன்னைச் சரியாகக் கவனித்துக் கொள்ளுவாள்!" என்று அமுதன் கூறிய வார்த்தைகள் பூங்குழலியின் காதில் அரைகுறையாக விழுந்தன.

மறுபடியும் பளிச் சென்று கண்ணைப் பறித்தது ஒரு மின்னல். அதன் ஒளியில் அவர்கள் முன்னம் அரை குறையாகப் பார்த்த காட்சி நன்றாகத் தெரிந்தது.

இருவரும் திடுக்கிட்டு போனார்கள். சாலையில் ஏறக்குறைய அந்த மண்டபத்துக்கு எதிரே ஒரு பெரிய ஆலமரம் வேரோடு பறிக்கப்பட்டு விழுந்து கிடந்தது. விசாலமாகப் படர்ந்திருந்த அதன் கிளைகளும் விழுதுகளும் தாறுமாறாக முறிந்தும் சிதைந்தும் கிடந்தன. அவற்றுக்கடியில் இரண்டு குதிரைகளும் ஐந்தாறு மனிதர்களும் அகப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்படி அகப்பட்டுக் கொண்ருந்தவர்களை விடுதலை செய்து காப்பாற்றுவதற்காக வேறு சிலர் முயன்று கொண்டிருப்பது தெரிந்தது. அவசரம் அவசரமாக அவர்கள் முறிந்து கிடந்த கிளைகளை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

"ஐயோ!" "அப்பா!" "இங்கே!" "அங்கே" "சீக்கிரம்!" என்பவை போன்ற குரல்கள் மழைச் சப்தத்தினிடையே மலினமாகக் கேட்டன.

இவற்றையெல்லாம் விட அதிகமாகச் சேந்தன் அமுதன், பூங்குழலியின் கவனத்தை வேறொன்று கவர்ந்தது.

(தொடரும்...)

# இராசிபலன்

18.08.2025
ஆவணி 02, திங்கட்கிழமை
தசமி முன்னிரவு 6.45மணி வரை

மிருகசீரிடம் பின்னிரவு 4.03 மணிவரை
சுப நேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35- 9.05 மணிவரை

சந்திராஷ்டமம்-
விசாகம்

வளவன்


மேஷம்

குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும்.


கடகம்

ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், வருமானம் பெருகி வளம் காணும் நாள், அரச வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


துலாம்

பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள், கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம்.


மகரம்

உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.


ரிஷபம்

எந்தவொரு வேலையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள், போசன சுகமுண்டு.


சிம்மம்

தொழில் நலன் கருதி எடுத்த முற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.


விருச்சிகம்

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் கௌரவம் கூடும் நாள்.


கும்பம்

உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவம் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், பயணங்களால் பலன் உண்டு.


மிதுனம்

வெளியில் புறப்படும் போது யாராவது உதவிகள் கேட்டு வரலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், வழிபாட்டால் திருப்தி காணவேண்டிய நாள்.


கன்னி

வர வேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், தொழிலில் ஏற்பட்ட போட்டிகள் மாறும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.


தனுசு

இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படலாம் உடல் நலன் சீராகும், காரிய அனுகூலமுண்டு.


மீனம்

குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ளுவார், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

மரணத்தைப் பற்றிச் சிந்திப்பவன் வாழத் தொடங்குகின்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் உன்னை அறிவதை விட, உன்னை உலகிற்கு அறிமுகம் செய்து கொள்.

– அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாள்வெட்டுக் கலாசாரத்தை தடுக்க முடியாதது ஏன்?

உலகம் எங்கோ சென்றுவிட்டது. புலம்பெயர் நாடுகளுக்குச் சென்ற எங்கள் தமிழ் உறவுகளும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்டுள்ளனர்.

இப்போதெல்லாம் புலம்பெயர் உறவுகள் தங்கள் ஊருக்கு வந்து நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்திலும் பங்கேற்றுள்ளனர்.

இதன் காரணமாக எங்கும் மக்கள் கூட்டமாக உள்ளது.

அதிலும் குறிப்பாக வர்த்தக நிலையங்கள், உணவு விடுதிகள் நிறைந்துள்ளன.

இவற்றைப் பார்க்கின்றபோது யாழ்ப்பாணம் தூங்காத நகரம் போல ஆகிவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அதேவேளை எங்கள் புலம்பெயர் உறவுகள் தங்கள் பிள்ளைகளுடன் தாயகத்துக்கு வருகை தந்து நல்லூர்க் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தில் பங்கேற்கின்ற அந்த உன்னதத்தைப் பார்க்கும்போது, உண்மையிலேயே புளகாங்கிதமடையாமல் இருக்க முடியவில்லை.

ஆம், எங்கள் தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்த எம் உறவுகளோடு எங்கள் வெளிநாட்டுத் தொடர்புகள் நின்று போய்விடுமோ என்ற ஏக்கம் நியாயமற்றதாகிப் போயுள்ளது.

உண்மை. எங்கள் புலம்பெயர் உறவுகளின் பிள்ளைகள் தம் பெற்றோர்களின் தாய் மண்ணுக்கும் ஊருக்கும் வருவதில் உச்சமான மகிழ்வை அடைகின்றனர்.

அதிலும் நல்லூர்க் கந்தனின் திருவிழாக்களில் கலந்து கொள்வதில் அவர்களிடம் இருக்கக்கூடிய பிரியம் அவர்கள் – அவர்களின் சந்ததி தொடர்ந்தும் தாயக மண்ணை மறக்காமல் வந்து போவர் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு நல்லூர்க் கந்தப் பெருமான் மூலகாரணமாக உள்ளார் என்ற உண்மையையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

நிலைமை இதுவாக இருக்கையில், எங்கள் இளைஞர்களின் முன்னேற்றம், அவர்களின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கும்போது வேதனை நெஞ்சை அடைக்கிறது.

ஆம், எங்கள் இளைஞர்களில் ஒரு பகுதியினர் போதைக்கும் மதுவுக்கும் அடிமையாகின்ற அபாய கட்டத்தில் இருக்கின்றனர்.

அதேநேரம் இன்னொரு தரப்பு வாள்வெட்டு கலாசாரத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு ஒரு பதற்றமான சூழ்நிலையை ஏற்படுத்தி வருகின்றனர்.

தவிர, புலம்பெயர் நாடுகளில் உள்ள ஒரு சிலர் இங்கு கூலிப்படைகளை வைத்து அவர்கள் மூலம் தங்கள் எதிரிகளை வாளால் வெட்டி வஞ்சம் தீர்த்த சம்பவங்களும் நடந்துள்ளன.

பொலிஸார் மற்றும் நீதி பரிபாலனம் என்ற கட்டமைப்புகள் பற்றி கிஞ்சித்தும் சிந்திக்காமல், வாள்களுடன் நடமாடுவதும் வாள் கொண்டு துரத்தித் துரத்தி வெட்டுவதுமான நிலைமை நீண்டு செல்வது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

**ஆக, எங்கள் இளைஞர்கள் சரியான முறையில் வழிப்படுத்தப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைப் பொறுப்பு வாய்ந்தவர்கள் செய்வது கட்டாயமானதாகும்.**

### பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு

## அநுர அரசுக்கு அழுத்தம் கொடுக்க இணை அனுசரணை நாடுகள் திட்டம்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் மாதக்கூட்டத் தொடரில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் இலங்கை தொடர்பில் கொண்டு வரப்படவுள்ள புதிய பிரேரணையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகளை ஆரம்பித்தல், பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்குதல், மாகாண சபைத்தேர்தல்களை விரைந்து நடாத்துதல் ஆகிய விடயங்கள் உள்வாங்கப்படவுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம்8 ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

தற்போது நடைமுறையில் இருக்கும் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" என்ற தீர்மானத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைவாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான விரிவான எழுத்துமூல அறிக்கை, கூட்டத்தொடரின் ஆரம்ப நாளான 8 ஆம் திகதி உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கினால் பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

இது இவ்வாறிருக்க, பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகள் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணையொன்றை சமர்ப்பிக்கவுள்ளன.

அப்பிரேரணையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் வாக்குறுதி அளித்தவாறு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பணிகளை விரைவில் ஆரம்பிக்க வேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குதல் மற்றும் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைத் தேர்தல்களைத் தொடர்ந்து காலந்தாழ்த்தாமல் விரைவாக நடாத்துதல் ஆகிய விடயங்கள் உள்வாங்கப்படவுள்ளன.

அதேவேளை செம்மணி சித்துப்பாத்தி மனிதப்புதைகுழி விவகாரம் சர்வதேச கவனம் பெற்றிருக்கும் நிலையில், மனிதப்புதைகுழிகளுடன் தொடர்புடைய விடயங்களும் இணையனுசரணை நாடுகளின் புதிய பிரேரணையில் உள்ளடக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந-7)

## நல்லூரில் வள்ளி திருமணம் இசை நாடகம் நாளை

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவம் சிறப்புற இடம்பெற்று வரும் நிலையில் நல்லைக் கந்தனின் மாம்பழத் திருவிழாவான நாளை செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணிக்கு வள்ளி திருமணம் இசை நாடக வடிவில் அரங்கேறவுள்ளது.

சக்தி தொலைக்காட்சியின் உற்சவ கால சிறப்புக்கலை அரங்கில் யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகத்தினரால் குறித்த நாடகம் அரங்கேறப்படவுள்ளது. (ந-7)

## ஊடகவியலாளர் குமணனிடம் ஏழு மணி நேர விசாரணை

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவர் கணபதிப்பிள்ளை குமணன் நேற்றுப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் ஏழு மணி நேர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

முன்னதாக முல்லைத்தீவு அளம்பில் பொலிஸ் நிலையத்தில் செயற்படும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் சட்டத்தரணி காண்டீபன் சகிதம் ஊடகவியலாளர் குமணன் முன்னிலையாகியிருந்த நிலையிலேயே, அவரிடம் சுமார் ஏழு மணி நேர தொடர் விசாரணை முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

### ஜனாதிபதி நிதியத்திலிருந்து

## பணம் பெற்ற அரசியல்வாதிகளின் சகாக்களுக்கு சிவப்பு அறிவித்தல்

(கொழும்பு)

வெளிநாடுகளில் கல்வி கற்பதற்காக ஜனாதிபதி நிதியிலிருந்து பணம் பெற்ற அரசியல்வாதிகளின் உறவினர்களுக்கு சிவப்பு அறிவிப்புகளை வெளியிடுவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக கடந்த பாராளுமன்றக் கூட்டத்தொடரின் போது வெளிநாட்டில் கல்வி கற்பதற்காக ஜனாதிபதி நிதியத்திலிருந்து உதவி பெற்ற அரசியல்வாதிகளின் உறவினர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பெயர் பட்டியலை அரசாங்கம் வெளியிட்டிருந்தது.

அதன் பிரகாரம் ஜனாதிபதி நிதியத்தால் செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் அவ்வாறு செலவிடப்பட்ட பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அரசாங்கம் சட்ட ஆலோசனையைப் பெற்று வருகின்றது. (ந-7)

### திருட்டுடன் தொடர்புடையவர்கள்

## சாவகச்சேரியில் கைது

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடத்தடிப் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி மடத்தடியில் ஆட்கள் இல்லாத வீடொன்றிற்குள் நுழைந்து தொலைக்காட்சிப் பெட்டி உள்ளிட்ட ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் பொருட்களைத் திருடியதன்பின் குடத்தனைப் பகுதியில் தலைமறைவாகியிருந்த நிலையில் மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து பெறுமதி வாய்ந்த பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைதான சந்தேக நபர்களை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(ந-7,30)

## யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

அம்பன்பொல பகுதியில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யானை தாக்கியதில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் அம்பன்பொல பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவர் எனவும் தனது நிலத்திலிருந்து காட்டு யானையை விரட்ட முயன்றபோதே தாக்கப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 40

சொக்கன்

நாம் இனிமேலும் பெற்றோல், டீசலை நம்பியிருக்க வேண்டுமா? வேறுவழியில மின்சாரம் மற்ற எரிபொருட்களை உற்பத்தி செய்தால் என்ன? என்று யோசிக்க ஆரம்பித்தார்கள்.

இதனால் உலகம் முழுக்க மற்ற எரிபொருட்களுக்கான தேடல் தொடங்கியது. பெரும்பாலான நாடுகள் நிலக்கரியிலிருந்து மின்சாரம், தண்ணீரிலிருந்து மின்சாரம், காற்றாலைகள், அனுமின் உலைகள் என்று விதவிதமான வழிகளில் தங்களுடைய மின்சாரத் தேவைகளை உள்ளூரிலேயே பூர்த்தி செய்து கொள்வதற்கான தீவிர ஆராய்ச்சிகளில் இறங்கினார்கள்.

இந்த நேரத்தில்தான், சில ஈராக் விஞ்ஞானிகள் ஃபிரான்ஸ் வந்து சேர்ந்தார்கள் நாங்க எங்கள் நாட்டிலே அணு மின்சாரம் தயாரிக்க வேணும் என்று நினைக்கிறோம். நீங்கள் அதற்கு உதவி செய்யமுடியுமா?

ஃபிரான்ஸ் உடனடியாக ஒப்புக்கொண்டது. இந்த இரு நாடுகளுக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்தத் தகவல் வெளியான போது இஸ்ரேலுக்கு லேசாகச் சந்தேகம். ஈராக் நிஜமாகவே அணு மின்சாரம் தான் தயாரிக்கிறதா அல்லது ஃ பிரான்ஸ் ஒத்துழைப்போடு அணு குண்டு தயாரிக்கப் போகிறார்களா?

இஸ்ரேல் இப்படிக் கேட்டதும் ஈராக் ஜனாதிபதி சதாம் உசேன் சிரித்தார் நாங்கள் அணு ஆயுதம் எதுவும் தயாரிக்க வில்லை எங்களுடைய நோக்கங்களுக்காகமட்டுமே பயன்படுத்துவோம் என்றார்.

இதை வேறு யார் சொன்னாலும் நம்பலாம். சதாம் உசேன் பேச்சைமட்டும் இஸ்ரேல் நம்பத் தயாராக இல்லை. எப்படியாவது ஈராக்கின் அணு ஆராய்ச்சித் திட்டங்களை நிறுத்த வேண்டும் என்று தீர்மானித்தார்கள். இல்லையென்றால் அங்கே தயாராகிற அணுகுண்டு நிச்சயமாக இஸ்ரேலின் தலையில்தான் வந்து விழும்!

உடனடியாக இஸ்ரேல் தன்னுடைய கூட்டாளி அமெரிக்காவை அழைத்துப்பேசியது ஏற்கெனவே சதாம் உசேன் தொல்லை தாங்க முடிய வில்லை இந்தாள் கையில் அணு ஆயுதமும் கிடைத்து விட்டால் வேறு வினை யே வேண்டாம். ஒட்டு மொத்த உலகத்திற்கும் ஆபத்து. உடனடியாக ஏதாவது செய்யுங்கள் ப்ளீஸ்!

அமெரிக்காவால் நேரடியாக ஈராக்கை மிரட்ட முடியாது. அவர்கள் ஃபிரான்ஸைக் கூப்பிட்டார்கள் யோவ் நீங்க எதுக்கு அநாவசியமாக சதாம் கட்சிக்குப் பலம் சேர்க்கிறீங்க? என்று அதட்டினார்கள்.

ஃபிரான்ஸ் யோசித்தது. நாம் தரப் போகும் அணு உலையை வைத்துக்கொண்டு ஈராக் மின்சாரம் தயாரிக்குமா அல்லது அணுகுண்டு செய்யுமா என்று யாராலும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. ஒருவேளை இவர்கள் அங்கே அணு ஆயுதம் தயாரித்துவிட்டால் அமெரிக்காமட்டுமில்லை எல்லா நாடுகளும் நம்மைத்தான் கோபித்துக் கொள்வார்கள். எதற்கு வம்பு? பேசாமல் சதாமுக்கு சாரி சொல்லி ஜகா வாங்கிவிடலாமா?



ம்ஹூம் சான்ஸே இல்லை. ஏற்கெனவே ஈராக்கிற்கும் ஃபிரான்ஸுக்கும் இடையே ஒப்பந்தம் உறுதியாகிவிட்டது. இதன்படி ஈராக்கிற்கு வேண்டிய அணு உலையை ஃபிரான்ஸ் தான் தயாரித்துக் கொடுக்கவேண்டும். அங்கே பயன்படுத்துவதற்கான யுரேனியத்தையும் அவர்களே சப்ளை செய்யவேண்டும்.

இப்போது ஃபிரான்ஸுக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது. ஈராக்கிற்கு நாம் யுரேனியம் கொடுக்க வேண்டும் என்கின்றது தானே ஒப்பந்தம்? அவர்களுக்கு அதிக சக்தி வாய்ந்த யுரேனியத்தைக் கொடுக்காமல் கொஞ்சம் மட்டமான சரக்கை அனுப்பி வைத்தால் என்ன?

இந்த லோகிரேட் யுரேனியத்தை கேரமெல் என்று அழைப்பார்கள். இதை வைத்துக்கொண்டு ஈராக் தாராளமாக மின்சாரம் தயாரிக்கலாம் அணுகுண்டு செய்யமுடியாது.

ஆனால் ஃபிரான்ஸின் இந்த முடிவை ஈராக் ஏற்றுக்கொள்ளவில்லை எங்களுக்கு ஹை குவாலிற்றி யுரேனியம்தான் வேணும் என்று பிடிவாதம் பிடித்தார்கள்.

அப்படியானால் என்ன அர்த்தம்? அணு மின்சாரம் தயாரிக்கிற போர்வையில் ஈராக் அணுகுண்டுதான் செய்யப்போகிறது. இஸ்ரேலின் சந்தேகம் உறுதியாகிவிட்டது!

உடனடியாக இஸ்ரேல் பிரதமர் மெனாகெம் பெகின் மொசாட் தலை வ்யிட்ஜக் ஹோஃபியைக் கூப்பிட்டார். நீங்கள் என்ன செய்வீர்களோ எனக்குத் தெரியாது ஆனால் அந்த ஈராக் அணு உலையை ஆரம்பத்திலேயே அழித்து விட வேண்டும். அது உங்களுடைய பொறுப்பு!

அப்போது ஈராக்கிற்கான அணு உலை ஃபிரான்ஸில் தயாராகிக் கொண்டிருந்தது. அங்கேயே அதற்கு வேட்டு வைத்துவிடலாம் என்று தீர்மானித்தார் யிட்ஜக் ஹோஃபி.

அதற்குமுன்னால் அந்த அணு உலை எப்படிப்பட்டது. எவ்வளவு சக்தி கொண்டது. அதை அழிப்பதற்கு எங்கே எப்படி அடிக்கவேண்டும் என்றெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு ஈராக் விஞ்ஞானிகள் மத்தியில் மொசாட்டுக்குள் உளவாளி வேண்டும்.

ஆனால் ஈராக்கிற் கும் இஸ்ரேலுக்கும் ஏழாம் பொருத்தமாச்சே அந்த நாட்டு விஞ்ஞானி எப்படி மொசாட்டுக்கு உதவுவார்?

கஷ்டம்தான் ஆனால் கொஞ்சம் செலவு செய்தால் நிச்சயமாக முடியும். எப்பேர்ப்பட்ட கூட்டத்திலும் காசைக் காட்டினால் வாயைப்பிளக்கும் பேர்வழிகள் நிச்சயமாக இருப்பார்கள். இல்லாவிட்டால் மது மாது என்று ஏதாவது ஒரு வீக்னெஸுக்கு விழுவார்கள். வளைத்துப்பிடித்துவிடலாம். அப்புறம் அவர்கள் விரலை வைத்தே ஈராக்கின் கண்ணைக் குத்த வேண்டியது தான்!

இதற்காக ஃபிரான்ஸில் உள்ள ஜாக்விஸ் மார்ஸெல் என்ற உளவாளியைத் தொடர்பு கொண்டது மொசாட் உங்க அணு ஆராய்ச்சி நிலையத்தில் வேலை செய்கின்ற ஈராக் விஞ்ஞானிகள் எல்லோருடைய பெயரும் எங்களுக்கு உடனடியாக வேணும்.

ரொம்ப ரிஸ்கான வேலைதான் ஆனால் ஜாட்விஸ் அசரவில்லை. எப்படியோ கஷ்டப்பட்டு மொசாட் கேட்ட தகவல்களை திரட்டி விட்டார். உடனடியாக மொசாட்டில் இருந்து அவருக்கு அழைப்பு வந்தது. நீங்கள் நாளைக்கு பாரிஸ் வருகிறீர்கள் தானே?

ஆமா ஜாக்விஸுக்கு ஆச்சரியம். அது எப்படி உங்களுக்குத் தெரியும்? மொசாட் அவருக்குப் பதில் சொல்லவில்லை நாளைக்கு நேராக நாங்க சொல்கின்ற தெருவுக்கு வந்து விடுங்கள். அங்கே காரை நிறுத்திவிட்டு நீங்க உங்கள் ஆஃபீஸுக்குப் போகலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசடியில்...

தாக்குதல் நடத்தப்பட்டது.

சம்பவம் தொடர்பில் ஐந்து சந்தேக நபர்கள் அதிரடியாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் நீதவான் முன்னிலையில், குறித்த சந்தேக நபர்கள் நேற்று பிரசன்னப்படுத்தப்பட்டபோது, அவர்களை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ந-7,104)

## வடக்கு கிழக்கில்...

நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில், தமிழ் மக்களின் காணிகளை அரசாங்கம் கையகப்படுத்தல் மற்றும் இராணுவப் பிரசன்னத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நிர்வாக முடக்கல் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அது அரசாங்கத்துக்கு அழுத்தமாக அமையுமா? என செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, பொய்யான தகவல்களை முன்வைத்தே நிர்வாக முடக்கலொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தமிழ் மக்களின் காணி அபகரிப்புத் தொடர்பான பிரச்சினையல்ல.

வடக்கு கிழக்கில் தற்போது இராணுவ முகாம்களை வேறு இடத்துக்கு கொண்டுசெல்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இராணுவ முகாம்கள் இடமாற்றம் செய்யப்பட்டதன் பின்னர்தான் அந்தக் காணிகளை எம்மால் பொதுமக்களுக்கு வழங்க முடியும். அதற்கான வேலைத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவ முகாம்களை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டிய தேவை இருப்பதனாலேயே, 200 பேர் இருந்த இராணுவ முகாம்களில் இராணுவ சிப்பாய்களின் எண்ணிக்கை 25 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

சுமார் 7 - 8 மாதங்களாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நளிந்த மேலும் தெரிவித்தார். (ம-7)

## விமானங்களை...

குடியகல்வு கருமபீடங்களில் ஏற்பட்ட நீண்ட வரிசை காரணமாகவே குறித்த நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தது.

இதன் காரணமாக பயணிகள் சிலர் தமது விமானங்களைத் தவறவிட்டதாகவும் ஒரே நேரத்தில் பல விமானங்களை இயக்கத் திட்டமிட்டிருந்தமையாலேயே இவ்வாறு தாம் அசௌகரியங்களைச் சந்திக்க நேர்ந்ததாகவும் பயணிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (ந-7)

## அரசியல் செல்...

தெரிவித்துள்ளார்.

நேற்று மல்வத்து அஸ்கிரி விஹாரையில் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்ற பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

கடந்த காலங்களில் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடினார்கள். ஆனால் இனி அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் வட்ஸ்அப் வழியாக அனுப்பும் முறைப்பாடுகளில், ஒரே நாளில் சுமார் 2,000 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளது.

அத்துடன் 30,000 அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை காணப்படுவதுடன், இந்த ஆண்டு 5,000 பேரும் எதிர்காலத்தில் மேலும் 10,000 பேரும் பணியமர்த்தப்படுவார் என்றார். (ந-7)

## ஓமந்தையில்...

வவுனியா ஓமந்தைப் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் சிறுவர்கள் உட்பட 13 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்ற குறித்த விபத்துத் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கண்டியில் இடம்பெற்ற மரணச் சடங்கு ஒன்றுக்குச் சென்றுவிட்டு அங்கிருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த மகேந்திரா ரக வாகனம் ஓமந்தை, ஏ9 வீதி மாணிக்கர்வளவுப் பகுதியில் சென்று கொண்டிருந்த போது கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டு எதிரே வந்த கனரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

குறித்த வாகனத்தில் பெண்கள் சிறுவர்கள் உட்பட 13 இற்கும் மேற்பட்டோர் பயணித்துள்ள நிலையில், விபத்தின்போது வாகனத்தில் இருந்த அனைவரும் வீதியில் தூக்கி வீசப்பட்ட நிலையில் சம்பவ இடத்திலேயே பெண் உட்பட இருவர் உயிரிழந்துள்ளதுடன் 13 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் முல்லைத்தீவு விசுவமடு பகுதியைச் சேர்ந்த யாழினி (வயது-33,) சுயன் (வயது-30) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அத்துடன் அனைவரும் ஒரே குடும்பங்களைச் சேர்ந்த உறவினர்களெனவும் அவர்கள் கண்டியில் இடம்பெற்ற மரண வீடு ஒன்றிற்கு சென்றுவிட்டு மீண்டும் விசுவமடு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை படுகாயமடைந்த சிறுவன் ஒருவன் உட்பட மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விபத்துத் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,250)

## போதைவஸ்துக்களுடன் பெண்ணொருவர் கைது

(கல்கிஸ்ஸை)

5 இலட்சத்திற்கும் அதிகளவு பெறுமதியான போதை மாத்திரைகளுடன் கல்கிஸ்ஸை குற்றத்தடுப்புப் பிரிவால் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரிடம் இருந்து 5,000 போதை மாத்திரைகளும் அந்த வர்த்தகத்தில் இருந்து ஈட்டிய 134,000 ரூபாய் பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட பெண், மேலதிக விசாரணைகளின் பின் கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2025.08.17
சீட்டிழுப்பு இலக்கம் 5924
K 0 0 1 8 1 9
அத சம்பத K 1 8 1 9
சீட்டிழுப்பு இலக்கம் 0499
National Lotteries Board

சுப தவசக
திகதி 2025.08.17
மிதுனம் 05 26 35 41

தன நிதானய
திகதி - 2025.08.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1954
T 08 18 38 71 T
Double Chance 02962

மெகா பவர்
திகதி 17/08/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2272
K 16 08 14 35 66

ஜய
திகதி 2025.08.17
சீட்டிழுப்பு இலக்கம் 0192
B 7 3 4 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4166
சீட்டிழுப்பு திகதி 17.08.2025
X 26 29 57 58
X
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.17
சீட்டிழுப்பு இலக்கம் 1233
சிம்மம் 21 45 46 47 சிம்மம்
58869

உத்தியோகபூர்வ முடிவுகள்
17.08.2025 வெற்றி வாரம் 0632
N 0 3 7 7 6 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,191,559.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2898
சீட்டிழுப்பு திகதி 2025.08.17 தினம் ஞாயிற்றுக்கிழமை
01 04 11 73 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,613,496.80
DLB

சனிதா
திகதி 17.08.2025 வெற்றி வாரம் 5059
18 19 22 79 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,641,353.60
DLB

சசிரி
வெற்றி வாரம் 750
17.08.2025 ஞாயிற்றுக்கிழமை
06 10 17
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4610
சீட்டிழுப்பு திகதி 17.08.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
13 23 27 55 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,728,548.80
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 28 32 38 65 72
2074
17.08.2025 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.588,390,634.00
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2724
சீட்டிழுப்பு திகதி : 2025.08.17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,943,481.60
02 24 31 32 M
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் காற்றாலைகள் அமைப்புக்கு எதிராக 15வது நாளாகப் போராட்டம்



மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றும் 15 ஆவது நாளாக சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் பள்ளிமுனை மற்றும் பெரிய கரிசல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் குறித்த போராட்டத்தில் நேற்று இணைந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

மேலும் மன்னாரைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களும் குறித்த போராட்டத்தில் மக்களுடன் இணைந்து தலையில் கறுப்புப் பட்டி அணிந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

மேலும் தமிழ், முஸ்லிம் மக்களும் மதத் தலைவர்களும் அருட் சகோதரிகளும் இதில் ஒன்றிணைந்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டதோடு மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்தனர். (ந-7)

# அதிகாரப்பகிர்வு கோரி நேற்று முரசுமோட்டையில் போராட்டம்

இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான சமஸ்டி முறையில் அதிகாரப் பகிர்வு வேண்டி வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் 100 நாள் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்றைய தினம் கிளிநொச்சி முரசுமோட்டை பொதுச்சந்தைக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ந-7)

# பாதாள...

என அமைச்சர் பிமல் ரத்நாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்பதே எமது அரசின் நிலைப்பாடு. எனவே நாம் அதனைச் செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இந்த நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் உருவாக்கப்பட்டது. எமது கட்சியின் அரசியல் எழுச்சியைத் தடை செய்ய வேண்டும் என்பதற்காகவே, எனவே இச் சட்டத்தை பற்றி நாம் நன்கு அறிந்துள்ளோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதே எமது அரசின் நோக்கமாகும்.

முன்னைய ஆட்சியாளர்கள் தென் பகுதிகளில் பாதாள உலகக் கோஷ்டிகளை உருவாக்கி நாட்டுக்குக் குந்தகம் விளைவித்தார்கள்.

அதன் விளைவாகவே இப்போதும் துப்பாக்கிச் சூடு, வாள்வெட்டு, அடிதடி போன்றன இடம்பெறுகின்றன.

மகிந்தவின் காலத்தில் பாதாள உலகக் கோஷ்டிகள் உருவாக்கப்பட்டு அவற்றுக்குப் பாதுகாப்பு வழங்கி தமிழர் பகுதியிலும் கிரண்ட்பாஸ் பகுதியிலும் அவை இரு குழுக்களாக இயக்கப்பட்டன.

ஆனால் நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் இரண்டு பாதாள உலகக் கோஷ்டிகள் தமக்குள் மோதிக் கொள்கின்றன.

அதுவே துப்பாக்கிச்சூடு, வாள்வெட்டு என நடந்தாகின்றன என்றார். (ந-7)

# ஐஸ் போதைவஸ்துடன் நால்வர் பொலிஸாரால் கைது

(சம்மாந்துறை)

ஐஸ் போதைப்பொருளை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் நான்கு சந்தேக நபர்கள் அம்பாறை மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருட்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


## வேலைவாய்ப்பு

யாழில் முன்னணி ஒப்பந்ததாரர் நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகைமையான உத்தியோகத்தர்கள் தேவை.

- தொழில்நுட்ப உத்தியோகத்தர் – 02 (ஆண்)
- தொழில்நுட்ப பயிற்சியாளர் – 02 (ஆண்)

(C-3670)

076 600 3303

மின்னஞ்சல் : vt sentha @ gmail.com

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

(C-3667)

UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3668)

076 825 7716 (ஆகாஸ்)

## விசேட சலுகைகள்

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

UK - 1320/= Australia - 2220/=
France - 2080/= Canada - 2570/=
Germany - 1920/= மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம் நெற்

321, K.K.S Road, Jaffna. 0777 554 528

கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மல்லாவி

(5078)

## பணிப்பெண் தேவை

நோயிலிருந்து குணமாகி வரும் பெண்ணை வீட்டில் தங்கியிருந்து கவனிப்பதற்குப் பெண் பணியாளர் தேவை.

(8)

071 847 5539

## தேவை

யாழ். - கொழும்பு மரக்கறி ஏற்றிச் செல்லும் லொறிக்கு (Lorry) உதவியாளர் (Cleaner) தேவை. வயது: 20 - 50 விரும்பத்தக்கது.

(5075)

075 617 8008

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள Hotel & Guest House ற்கு உதவியாளர்கள் (ஆண்/ பெண்) இருபாலாரும் தேவை.

(5074)

076 717 2728

## காணி தேவை

யாழ்ப்பாணம் கோப்பாய் பிரதேச சபை எல்லைக்குள் வடமராட்சி பகுதிகளில் 10 பரப்புக்கு மேலாக உள்ள காணிகள் தேவை. குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை. காணி உரிமையாளர் தொடர்பு கொள்ளவும்

(5076)

தொடர்பு: 076 739 0413

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

(C-3667)

0777-068-777
v2vacancies@gmail.com

## வெளிநாட்டில் (canada) இல்வசிக்கும் மணமகள்களுக்கு மணமகன்கள் தேவை

1981(Divorce), 1990, 1990(Divorce), 1993, 1995(02), 1997, 1999, ஆண்டுகளில் பிறந்த மணமகள்களுக்கு உள்ளூர் மணமகன்கள் தேவை.

(5077)

077 041 3462, 077 408 8241

## உடன் விற்பனைக்கு

யாழ்.KKS வீதியில் சிவன் கோயிலுக்கு அண்மையில், KKS வீதி முகப்புடன் 150 அடி நீளமும் 150 அடி அகலமும் கொண்ட காணித்துண்டு விற்பனைக்குண்டு. இதனை 15X150 ஆக பிரித்தும் விற்கப்படும்.

(C-3669)

தொடர்பு: 077 723 2535


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தா[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.